விலை ரூபா 15.00 REGISTERED AS A CATHOLIC WEEKLY (G.P.O.197) FOUNDED 19 FEB 1876

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு


# பாதுகாவலன்

22-11-2009 PAATHUKAVALAN

மலர்: 133 இதழ் : 22 பக்கங்கள்: 08 St. Joseph's Catholic Press. 360 Main Street. P.O. Box. 2, Jaffna, Sri Lanka. Tel 021-222 2378. Fax 021 2229041. ISSN 1391 - 7633

# குருக்களை உருவாக்குவதில் பொதுநிலையினரின் பங்கு மகத்தானது

## புனித மடுத்தீனார் குருமட விழாவில் யாழ் ஆயர்



சிறிய குருமட மாணவர்களே எதிர் கால குருக்கள்! இக் குருமட மாணவர்களுக்கு பொதுநிலையினர் பல்வேறு வழிகளில் உதவி புரிவது மகிழ்ச்சியளிக்கிறது. முன்னொரு காலத்திலே குருமடத்தினுள் என்ன நடக்கிறது என்பதே தெரியாமல் அதற்குள் நுழைவதற்குக் கூட பொதுநிலையினர் தயக்கம் காட்டியதுண்டு. இந் நிலையில் குருமாணவர்களின் பயிற்சிகள் அனைத்தையும் குருக்களே வழங்கி வந்தனர். ஆனால் இன்று குருமட மாணவர்களின் பயிற்சிகளில் பொதுநிலையினர் அதிகமாக ஈடுபடுவதைக் காண்கிறோம். இவர்களின் பணி அழகானது. குருத்துவ உருவாக்கக் காலங்களில் தொடர்ந்தும் இவர்கள் அக்கறை செலுத்தி ஈடுபாட்டுடன் உழைக்க வேண்டும் என்று வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள். புனித மத்தீனார் குருமட விழாவில் தெரிவித்தார். இந் நிகழ்வினைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## பொதுநிலையினரின் மேய்ப்புப் பணி பொறுப்புக்களை அங்கீகரித்து ஊக்கப்படுத்த வேண்டும்

### திருத்தந்தை 16ம் பெனடிக்ற்



கடந்த வைகாசி மாத இறுதி வாரத்தில் உரோமாபுரியில் இடம் பெற்ற திருச்சபை சார்ந்த (ecclesial conference) மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போது திருத்தந்தை அவர்கள் மேற்படி தனது கருத்தை வெளியிட்டுள்ளார். பொதுநிலையினர் தங்கள் பங்களிப்பு பற்றி கூடிய விழிப்படைய வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த மாநாடு "கூட்டுப் பொறுப்புள்ள மேய்ப்புப் பணியும் திருச்சபையின் அங்கத்துவமும்" என்ற கருப் பொருளில் இடம் பெற்றுள்ளது. பொதுநிலையினர் திருநிலையினரின் கூட்டுப் பணியாளர் மாத்திரமல்ல, அவர்கள் திருச்சபையின் பணிப் பொறுப்பிலும் பங்காளர்கள் என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார். எமது இன்றைய திருச்சபையில் கூட்டுப் பொறுப்புள்ள மேய்ப்புப்பணி பற்றிய புதுப்பித்தலுடன் கூடிய விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தின் பெயரால் நாமெல்லோரும் இப்பணியை முன்னெடுத்துச் செல்ல அழைக்கப் படுகின்றோம்.

இது ஒரு "மனோபாவ மாற்றத்தை "Change of Mentality" வேண்டி நிற்கிறது என்பதை திருத்தந்தை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றார். இந்த "மனோபாவ மாற்றம்" குறிப் பாக பொதுநிலையினர் தொடர்பாக ஏற்பட வேண்டும். அதாவது அவர்களை இறை பணியாளருடன் இணைந்து பணியாற்றுவோர் என்று கருதுவதற்கு பதிலாக (8ம் பக்கம் பார்க்க...)

## மாபெரும் பலவர்ணக் கண்ணாடியில் இயேசு மரியின் ஓவியம் (Mosaic Art)





புனித மரியாள் பேராலயம் இலங்கைத் தீவின் மிகப் பெரும் ஆலயங்களுள் ஒன்றாக விளங்குகிறது. இவ்வாலயக் கட்டட வேலைகள் பூர்த்தியாகி 25வருடங்கள் கடந்த பின்னும் அதன் உட்பகுதி வெறுமையாகவே காட்சியளிக்கின்றது. எனவே இவ்வாலயத்தின் சிறப்பையும் அழகையும் இன்னும் மெருகூட்ட, 15 அடி உயரமான பலவர்ண கண்ணாடியில் இயேசு மரியின் ஓவியம் வரையப்பட்டு புதிதாக பீடத்தின் பின்புற சுவரில் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஒரு பக்கத்தில் ஆண்டவர் இயேசுவின் உத்தானமும், மறுபக்கத்தில் புனிதமரியாளின் விண்ணேற்பும் இச்சாளரங்களில் சித்தரிக்கப்பட்டிருக்கின்றது. ஐரோப்பாவின் பிரபல ஆலயங்களின் சாளரங்கள் இவ்வித மான வேத படங்களால் அலங்கரிக்கப்பட்டு அங்கு செல்லும் மக்களுக்கு அருட்சி கொடுப்பவையாக விளங்குகின்றது. எனவே வெறுமையுற்றிருந்த எமது பேராலயத்தின் பீடத்தின் மேற்புற சுவரில் இருக்கும் திருச்சிலுவைக்கு இருபக்கங்களிலும் இந்த சாளரம் அமைந்துள்ளது. இவை இரண்டும் இந்தியாவின் கேரள மாநிலத்தில் இயங்கும் பெயர் பெற்ற 'மொயிலன்' கலைக் கூடத்தில் வடிவமைக்கப்பட்டு, கப்பல் வழியாக கொழும்புக்கு கொண்டு வரப்பட்டு இங்கு வந்தடைந்தன. இதை ஆலயத்தில் நிர்மாணிக்கும் பணி, அருட்தந்தை வேதநாயகம் அ.ம.தி அவர்களின் வழிகாட்டலிலும், பொறியியலாளர் திரு. தனசிங்கத்தின் வழிநடத்தலிலும், பங்குத்தந்தை அருட்பணி. சகாயநாயகம் அவர்களின் மேற்பார்வையிலும் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. கிழக்குத் திசை நோக்கி அமைக்கப்பட்டிருக்கும் இச்சாளரத்தின் ஊடாக சூரிய ஒளி உட்பிரவேசிக்கும் போது அது அழகாக காட்சியளிக்கும். இம்முறை மார்கழி மாதம் 8ம் திகதி மரியாள் மாசில்லாமல் உற்பவித்த திரு நாளில் இது திறந்து வைத்து ஆசீர்வதிக்கப்படும். இவ் ஓவியம் பேராலயத்துக்கு வரும் மக்களின் கவனத்தை ஈர்த்து இறைவன் பால் அவர்கள் எண்ணங்களை உயர்த்தும் என நம்புகின்றோம்.

## "வருகின்றோம் திருத்தொண்டர்களாய்"

யாழ் மறைமாவட்டம் நான்கு புதிய திருத்தொண்டர்களைப் பெற்றதை இட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றது. அருட்சகோதரர்கள் **அ.ஜெ.அ. ஜெயரஞ்சன், ஸ். டியூக் வின்சன், ஆ. ஜஸ்ரீன், ஆ. மைக் மயூரன்** ஆகியோர் யாழ் ஆயர் **அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை** அவர்களால் 19.11.2009 அன்று தூய சவேரியார் குருத்துவ கல்லூரி சிற்றாலயத்தில் நடைபெற்ற திருப்பட்டமளிக்கும் சடங்குத் திருப்பலியில் திருத்தொண்டர்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர். இத்திரு நிகழ்வில் பெரிய குருமட உருவாக்குனர், குருக்கள், ஆசிரியர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள் மற்றும் திருத்தொண்டர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மேலும் இத்திருப்பலியின் போது அருட்சகோதரர்கள் சிலர் குருத்துவ திருநிலை வேட்பாளர்களாகவும், பீடத் துணையாளராகவும் ஆயர் அவர்களினால் ஏற்படுத்தப்பட்டுள்ளனர். இத்திருத் தொண்டர்களில் மூவரின் குடும்பத்தினர் வன்னிப் போர் - இடம்பெயர்வுகளுக்குள் சிக்கி மீண்டு வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்புதிய திருத் தொண்டர்களை மகிழ்ச்சியோடு வரவேற்பதுடன் அவர்களின் பணி வாழ்வு சிறக்க செபத்துடன் கூடிய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

## இறைபதம் அடைந்தார்



முன்னாள் பாதுகாவலன் ஆசிரியராக பணியாற்றிய அருட்பணியாளர் ப.யோ. ஜெபரட்ணம் அடிகளாரின் அன்புத் தந்தையார் திரு. ஞானப்பிரகாசம் பத்திநாதர் அவர்கள், கடந்த 10.11.2009 அன்று தனது 95வது வயதில் இறைவனடி சேர்ந்தார். இவர் திருச்சிலுவை கன்னியர் சபையை சேர்ந்த அருட்சகோதரி புளோறினா என்பவரின் அன்புத் தந்தையாரும் ஆவார். இவரது இறுதிச் சடங்குகள் 14.11.2009 அன்று அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்தில் இடம்பெற்றன. அமரர் ஞா. பத்திநாதர் குடும்பத்தினருக்கு பாதுகாவலன் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## நினைவுபடுத்துகிறோம்

வெளிவரவிருக்கும், பாதுகாவலன் கிறிஸ்மஸ் சிறப்பு மலரில், உங்கள் ஆக்கங்கள் இடம் பெற வேண்டுமா? இக்காலத்தின் குறிகளோடு, கிறிஸ்து பிறப்பு விழா கருப்பொருளை மையமாகக் கொண்டு, உங்கள் ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். ஆக்கங்கள் சுருக்கமாகவும், தெளிவான கையெழுத்திலும் இருப்பதை நாம் எதிர் பார்க்கிறோம். அனுப்பவேண்டிய இறுதித் தகதி 30.11.2009 .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பது வீணாகும்

## அரசன்

இது ஒரு மந்திரச் சொல்.

இதற்கு, இராசன், வியாழன், முக்குவர் தலைவன், புரவலன், பெம்மான், ஏந்தல், பூபாலன், வேந்தன், மன்னன், நரபதி, பொருநன், சக்கிரி, நிருபன், குரிசில், பார்த்திவன், கோ, கொற்றவன், இறைவன், அண்ணல், தலைவன், காவலன் - என்று அகராதி அர்த்தம் கற்பிக்கிறது.

மனித இனப் பரம்பலுக்குள் மிகத் தொன்மையாக இருந்துவரும் ஒரு பாத்திரப் படைப்பு - அரசன். சமூக கட்டமைப்பு - இலக்கியங்கள், இதிகாசங்கள் - இவற்றின் காரண கர்த்தாக்கள் இவர்கள். சாம்ராச்சியங்கள், நாகரீகங்கள், மதங்களின் எழுச்சிக்கும், வீழ்ச்சிக்கும் காரணமானவர்களும் இந்த அரசர்கள் - அரச பரம்பரையினர்தான்.

ஆரிய, மௌரிய, குப்த பேரரசுகள் அரச பரம்பரையை வரலாற்றில் மனித சமுதாயத்திற்கு அறிமுகம் செய்தன. கல்வெட்டுக்களிலும், தூண்களிலும், குகைகளிலும் பதியப்பட்ட இவ் அரசர்களின் சாதனைகளும், குறிப்புக்களும் இன்றுவரை நம்மிடையே உண்டு.

திருவிவிலியம் பதிவு செய்திருக்கின்ற இரட்சணிய வரலாறு, அரசர்கள் பற்றிப் பேசுகின்றது.

பிலிஸ்தியர், கனானேயர், ஜெபுசேயர் போன்ற வேற்று இனத்தவர்கள் அரசர்களைக் கொண்டிருப்பதுபோல எமக்கும் ஓர் அரசன் வேண்டும் என்று இஸ்ரவேல் மக்கள் சாமுவேலிடம் முறையிட்ட போது, ''ஆண்டவர் ஒருவரே உங்களுக்கு அரசன் வேறு அரசர் உங்களுக்கு வேண்டாம்'' என்று முதலில் மறுத்து விடுகிறார் சாமுவேல். ஆண்டவரும், ஓர் அரசன் வேண்டுமென்று கேட்ட மக்களுக்கு ''நீங்கள் கேட்கும் அரசன் உங்கள் புதல்வர்களை தன் தேர் ஓட்டிகளாகவும் குதிரை வீரர்களாகவும் வைத்துக்கொள்வான். தன் நிலத்தை உழுபவராகவும், தன் விளைச்சலை அறுவடை செய்பவராகவும் தன் போர்க் கருவிகளையும் தேர்க்கருவிகளையும் செய்பவராகவும் நியமித்துக் கொள்வான். மேலும் அவன் உங்கள் புதல்வியரை பரிமள தைலம் செய்கிறவர்களாகவும், சமைப்பவர்களாகவும், அப்பம் சுடுபவர்களாகவும் வைத்துக் கொள்வான். நீங்கள் அவனுக்கு பணியாளர்களாக இருப்பீர்கள். அந்நாளில் நீங்களே உங்களுக்காக தேர்ந்து கொண்ட அரசனை முன்னிட்டு முறையீடு செய்வீர்கள்'' என்று சாமுவேல் மூலம் ஆண்டவர் சொல்லி அனுப்புகிறார். ஆனால் மக்களோ சாமுவேலின் குரலுக்கு செவிகொடுக்க மறுத்து எங்களுக்கு கட்டாயமாக ஒரு அரசன் வேண்டும் என்று பிடிவாதமாய் நின்றனர். இறுதியில் மக்களின் விருப்பத்திற்கே ஆண்டவர் அவர்களை விட்டு, அரசனை ஏற்படுத்த அனுமதி வழங்குகிறார்.

ஆனால் நடந்தது என்ன?

தாவீதினுடையவும், சாலமோனுடையவும் எல்லா வளமான காலங்களோடு அரசர்கள் வரலாறு என்னும் திரை அகன்று, அரசுகள், அதிகாரங்கள், ஜெருசலேம் தேவாலயம் என்று இறுதியாக அனைத்தையும் இழந்த நிலையில் இஸ்ராயேல் மக்களின் கவலைக்கிடமான சோக வரலாறே நீண்டு கிடக்கிறது.

காரணம்,

இந்த மக்களின் அரசர்களும், தலைவர்களும் ஏன் மத தலைவர்களும் தங்கள் விசுவாசத்தையோ, நம்பிக்கைகளையோ தம் ஆண்டவராகிய கடவுள் மேல் வைக்கவில்லை.

அரசர்கள் போர் படைகளையும், போர்க் கருவிகளையும் வலுப்படுத்துவதற்கு முனைந்தார்கள், அல்லது அருகிலிருந்த வலிமை நாடுகளிடம் உதவி தேடிப் போனார்கள். மக்களும் தம் தலைவர்களும் சில பயன்கள் பெறுவோம் என எண்ணி சில உருவக வழிபாடு செய்தார்கள்.

அதன் விளைவாக இஸ்ராயேல் கடவுள் கொடுத்த நாட்டை இழந்தது; கோவில் எரிக்கப்பட்டது; தாவீது குடும்பத்தின் தலைமை பீடம் சிறைப்பிடிக்கப்பட்டது.

எல்லாம் ஒரு கனவுபோல மறைந்து போனது.

ஏகபோக உரிமைகளோடு இவர்கள் இவ்வாறு உலகை வலம் வருவதற்கு ஒரே காரணம் - இவர்களோடு எப்போதுமே ஒட்டிக் கொண்டிருக்கும் அதிகார பலம். அதனால் வந்த படைப்பலம் - பணப்பலம் - செல்வாக்கு - அத்தோடு கூடவே செருக்கும்.

இந்நிலையில் மக்களினத்தை மீட்டுக் காக்க - வழிநடாத்த ஒரு தலைவன் வேண்டும் என்று உணரப்பட்ட போது இறைவனை ஒரே தலைவனாக உருவகம் செய்து ஏற்றுக் கொண்ட மக்கள், வானதூதர்களை அவர் சேனைகளாகவும், இறைவனின் பிரசன்னத்தை இறையாட்சியாகவும் வருணித்து, இறைவனின் தலைமையை உலகு சார்ந்த மொழிகளிலே புரிந்து கொள்ள முற்பட்டனர். அதன் பின்னணியில் தான் கிறிஸ்து ஓர் அரசர் என்ற ஒரு கருத்தியல் பிறந்தது.

ஆனால் உலகு கொண்டிருக்கும் அரசு பற்றிய புரிதலுக்கும், இக் கிறிஸ்துவின் அரசு பற்றிய செல்நெறிக்கும் (Trend) இடையே மிகப் பெரிய இடைவெளியுண்டு.

பிலாத்து தன் விசாரணையில், ''நீ அரசனா?'' என்று கேட்டதற்கு, ''அரசன் என்பது நீர் கூறும் வார்த்தை. என் அரசு இவ்வுலகு சார்ந்தது அல்ல...'' என்ற இயேசுவின் பதிலில் இருந்தே இது தெளிவாகிறது.

கிறிஸ்துவின் அரசு சார்ந்த மதிப்பீடுகள் புதிய வெளிச்சத்தையும், புதிய பார்வையையும், புதிய உலகையும் இம்மானிடர்கள் மத்தியில் ஏற்படுத்தி உண்மையின் அரசு, நீதியின் அரசு, அன்பின் அரசு என்ற மதிப்பீடுகளால் இவ்வுலகை நனைக்கிறது. பின்னர் அப்பணியை செய்ய கிறிஸ்துவின் முப்பணிகளில் ஒன்றான அரச பணி ஒவ்வொரு தலைவனுக்கும், கிறிஸ்தவனுக்கும் அழைப்பையும் உரிமையையும் வழங்கி நிற்கிறது.

எனவே ஆட்சி செய்யும் - தலைமையேற்கும் - வழிநடத்தும் ஒவ்வொரு பணியும் இறைவனிடமிருந்து - கிறிஸ்து அரசரிடமிருந்து வருவதால் அது தூயது. அதனால் தான், அரசன் - தலைவன், என்ற பதங்களும் - அவர்களின் ஆட்சிப் பணிகளும் பரிசுத்தமானவையாகக் கொள்ளப்படுகின்றன.

ஆனால் இன்று அரசன் - தலைவன் என்ற நிலைகள் தமது சுயலாப - அரசியல் ஆளுகைகளால் களங்கப்பட்டு, கறைப்பட்டு போய் கிடக்கின்றது என்பது தான் உண்மை.

உலக மயமாக்கலுக்குள் - போட்டி உலகத்துக்குள், அதிகார ஆசையும், பணப் பெருக்க மாயையும், அகங்காரமும் தலைதூக்கும் போது - தலைவர்களாக பிறந்தவர்களும், தலைவர்களாக உருவாகியவர்களும், தலைமை பதவி திணிக்கப்பட்டவர்களும் தலைகால் புரியாமல் நடந்து கொள்கின்றனர். மக்களின் உயிர்கள் மேல் நடந்து தமது அதிகாரத்தை நிலைப்படுத்துகின்றனர்.

இரத்தக் கறைபட்ட கரங்களோடு, வெற்றிக் களிப்பில் அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள பார்க்கின்றனர். இத்தகையோர் ஒரு புறமிருக்க, மறுபுறத்தில் தமது தலைமை மற்றும் தோழமைகளை காத்துக் கொள்ள உண்மைகள் பேசாது மௌனம் காப்பதாலும் - அநீதிக்கு ஆதரவு - துணை போவதாலும் தமது அதிகார - ஆட்சி - பதவி நிலைகளை கறைப்படுத்தி கொள்கின்றனர்.

இஸ்ராயேல் மக்களை தூய்மைப்படுத்திக் கொள்ள பாபிலோன், பிலிஸ்தியர்களை கோடரிக்காம்பாக ஆண்டவர் பயன்படுத்தினார். எனினும், அவர்களுக்கான தண்டனையை அவர் கொடுக்க தவறவில்லை என்பதை மீட்பின் வரலாறு சொல்கிறது.

''அரசன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும்'' என்ற முதுமொழி இன்று சற்றுப் பலமாக அடிபடத் தொடங்கியிருக்கிறதா?

# வள(னா)ர் பப்பா பதில்கள்

**1. கேள்வி :- அன்புள்ள வளனாரே,**
**கடவுள் செய்ய முடியாத காரியங்கள் என்று ஏதும் உண்டா?**

**அன்ரன், யாழ்ப்பாணம்.**

பதில் :- ஆம் கடவுள் செய்ய முடியாத காரியங்கள் மூன்று என்று சொல்வார்கள்.
1) தான் தந்த சுதந்திரத்தை திரும்ப எடுக்கமுடியாது.
2) தான் உருவாக்கிய உயிரை அழிக்க முடியாது
3) தான் கொடுத்த அருளை திரும்ப பெற முடியாது.
(உம்மை திருத்த முடியாது)

**2. கேள்வி :- வளனாரே, புனிதமான பாதுகாவலன் பத்திரிகையில் திரைப்பட திறனாய்வு தேவைதானா?**

**சுரேஷ், பண்டத்தரிப்பு.**

பதில் :- திறனாய்வு (திறன் + ஆய்வு) என்ற சொல்லே உமக்கு பதில் தந்து விட்டது என நான் நினைக்கிறேன். இன்று சினிமா திரைப்படம் சமூகத்துக்குள்ளே ஊடுருவி மாபெரும் சக்தியாக வலம் வருகிறது. இதன் பல அம்சங்கள் சமூக சீரழிவிற்கு தீனிபோடுகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. எனவே அதனை விமர்சனம் செய்து திறன் - ஆய்வு செய்து - நல்லவற்றை பார்க்கும் ஒரு வழிகாட்டலை வழங்குவது காலத்தின் தேவை. 'இருளை பழித்துக் கொண்டிருப்பதைவிட ஒளியை ஏற்று' என்பது இதுதான்.

உமது தூய்மையான ஆலயத்திலோ, வீட்டிலோ தும்புத்தடிகள் தேவையில்லையா? இத் திரைப்பட திறனாய்வும் ஓர் அழுக்கு அகற்றும் துடைப்பம் என்று எடுத்துக் கொள்ளுமேன். (இதைவிட தும்புத் தடியாலேயே அடித்திருக்கலாமே என்று நீர் நினைப்பதும் புரிகிறது)

**3. கேள்வி :- வளனாரே, தலைவர் இருக்கிறாரா?**

**அமலன், யாழ்.**

பதில் :- இதில் என்னப்பா சந்தேகம்? அவர் இருக்கிறார். அவருக்கு ஏது முடிவு? அவர் தான் ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருள் ஆச்சே. நீர் நாஸ்திக வாதியா? என்ன? இம்மானுவேல் என்றால் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்பதுதானே பொருள். (ஹி ஹி ஹி)

**4. கேள்வி :- அன்புள்ள வளனாரே, 2012ல் உலகம் அழியுமா?**

**ராஜசேகரன், மல்லாகம்.**

பதில் :- அது 'ருத்ரம்' திரைப்பட இயக்குனர், ஒளிப்பதிவாளர்களை தான் கேட்க வேண்டும். உலக முடிவின் நாளோ, நாழிகையோ எவருக்குமே தெரியாது. ஏன் மனு மகனுக்கே தெரியாது என்று புதிய ஏற்பாட்டில் இயேசுவே கூறும்போது, நீர் அந்த விளக்கத்தை என்னிடம் கேட்பது உமக்கே நியாயமா? ஒவ்வொருவரும் சந்திக்கும் தனிப்பட்ட மரணமே அவனுக்கு - அவளுக்கு ஓர் உலக முடிவு என்று எண்ணி, மரணத்திற்கு தயாராக வேண்டும்.

**5. கேள்வி :- வளனாரே, கடி ஜோக் ஒன்று சொல்வீர்களா?**

**சசி, குருநகர்.**

பதில் :- திருவள்ளுவர் எழுதியது திருக்குறள் என்றால் அவரின் மனைவி எழுதும் குறளுக்கு என்ன பெயர்?
திருமதி குறள் (ஹி ஹி ஹி)

**6. கேள்வி :- வளனாரே, தாய்ப் பாசத்திற்கு ஒரு கவிதை சொல்வீர்களா?**

**அன்பு, கொய்யாத்தோட்டம்.**

பதில் :-
ஓ பிரம்மாவே
அன்னையர்களை
சூரியன்களாக அறிவித்துவிடு
அவர்கள் மறைந்தாலும்
மீண்டும் தோன்றுவதற்கு

# சிந்தனைத் தூறல்கள் - 04

**அப்துல் ரகுமானின்** **சிறகுகளின் நேரம்**

## திறந்த புத்தகங்களும் பாம்புப் புற்றுகளும்

**சென்ற வாரத் தொடர்ச்சி...**

அதற்குக் காரணம் அவர்களுக்கு ஆசைகளை அடக்க வேண்டியஅவசியமே இல்லை.

இளைஞன் ஒருவன் ஒரு பெண்ணை விரும்புகிறான் என்றால், சிறிதும் தயக்கமின்றி அவளிடம் அதைத் தெரிவிக்கலாம்.

பெரியவர்களும் அவர்களைச் சேர்த்து வைத்துவிடுவார்கள். குலம், கோத்திரம், சாதகம், நாள் நட்சத்திரம் எல்லாம் அவர்களிடம் இல்லை.

தவறான ஆசைகளே அவர்களுக்கு ஏற்படுவதில்லையா? யார் மீதும் அவர்களுக்கு வெறுப்பு உண்டாவதில்லையா? என்று கேட்கலாம். ஏற்படும். ஆனால் அது மிக அபூர்வம்.

பெண்ணொருத்தியிடம் தப்பாக நடப்பதுபோல், யாரையாவது கொடுமைப்படுத்துவது போல் அல்லது கொலை செய்வது போல் அவர்கள் கனவு காண்பதுண்டு.

ஆனால், இது மிக மிக அபூர்வம். இதற்குக் காரணம் இருக்கிறது.

யாராவது ஒருவன் இதுபோன்ற கனவு கண்டால் விடிந்ததும் அவன் ஊர்ப் பெரியவர்களிடம் அதைச் சொல்லிவிட வேண்டும். அவர்களுக்கிடையே அப்படி ஒரு சம்பிரதாயம்.

ஊர்க் கட்டுப்பாட்டின்படி தப்பாகக் கனவு கண்டவன் எந்தப் பெண்ணிடம் கனவில் தப்பாக நடந்தானோ யாரைக் கொடுமை செய்தானோ அல்லது கொலை செய்தானோ அந்த நபரிடம் செல்ல வேண்டும்.

அப்படிச் செல்லும்போது அவர்களுக்குப் பரிசாகப் பூ, பழம், இனிப்பு கையில் கொண்டு செல்ல வேண்டும்.

இந்தப் பரிசுப் பொருள்களை அவர்களிடம் கொடுத்து, 'கனவில் உங்களிடம் தப்பாக நடந்துகொண்டேன். தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்' என்று கெஞ்சிக் கேட்கவேண்டும்.

அவர்கள் மன்னித்தால்தான் திரும்பி வரவேண்டும். அவர்கள் மன்னிக்கவில்லையென்றால் மன்னிக்கும்வரை அவர்கள் வீட்டுக்குமுன்னால் உட்கார்ந்திருக்க வேண்டும்.

(தூறல் தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு தியானத்துளிகள்

அருட்திரு. ஜோசப் செல்வன் பிகிறாடோ செ.தா

**ஒவ்வொரு ஞாயிறு சிந்தனைத் துளிகளையும் வாசிக்கும் முன்னர் அன்றைய ஞாயிறு தினத்திற்குரிய திருவாசகங்களை நன்றாக வாசித்து அவ்வாசகங்களில் உங்களின் மனதினைத் தொடும் வசனங்களை தியானித்து அதன் பின்னர் இந்த சிந்தனைத்துளிகளை தியானத்தோடு வாசித்தால் நற் பயன் பெறலாம்.**

## பொதுக்காலம் 34 ஆம் ஞாயிறு

**தானியேல் 7:13-14, திருவெளிப்பாடு 1:5-8, யோவான் 18:33-37**

### கிறிஸ்து அரசர் பெருவிழா

**மனங்களை வெல்லும் அரசன்தான் மக்களை ஆளும் அரசன்.**

கிறிஸ்து அரசரின் புனித நாமத்திலே பிரியமான எனது சகோதர சகோதரியரே, அன்புப்பிள்ளைகளே! கடந்துபோன இரு வாரங்களும் இறைவார்த்தையின் சக்தி உங்களுடைய நாளாந்த வாழ்க்கைப் பாதையில் பல வசந்தங்களை நிறைத்திருக்கும் என உறுதியாக நம்புகின்றேன். எவ்வளவு வேகமாக பொதுக்காலத்தினுடைய 33 வாரங்களும் உருண்டோடி விட்டது பார்த்தீர்களா?!! கிறிஸ்து அரசருடைய வாரமாகிய 34வது வாரத்திலே மீண்டுமொரு முறை உங்கள் எல்லோரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி.

பொதுக்கால ஞாயிறு தினங்கள் எல்லாம் முடிவுற்ற நிலையில் எதிர்வரும் வாரத்தில் திருவருகைக் காலத்தினை ஆரம்பிக்கப் போகும் எம் எல்லோரையும், ''கிறிஸ்து இந்தப் பிரபஞ்சத்தின் அரசர்'' எனும் மாபெரும் விழாவைக் கொண்டாட திருச்சபையோடு இணைந்து இந்த ஞாயிறு தினம் எமக்கு அழைப்பு விடுக்கின்றது. எமது எல்லோரினதும் மனங்களில் நிலையான அரசுரிமையை பெற்று எம்மையெல்லாம் ஆட்சி செய்பவர் இயேசு ஆண்டவர் ஒருவரே!

அவரே இறுதிநாளில் எம் எல்லோரையும் இறுதியாக சந்தித்து தீர்ப்பிடுபவர் என்பதனை இவ்வார மூன்று வாசக திருப்பொழிவுகளும் தெளிவாக எடுத்தியம்பி நிற்கின்றன. இரு வேறு விதமான அரசர்கள் ஜெருசலேமிலுள்ள அரண்மனையில் சந்திப்பதனை இன்றைய நற்செய்தி வாசகம் அழகாக படம் பிடித்துக் காட்டுகின்றது. அரச சிம்மாசனத்தில் அதிகார வெறியோடும் ஆளணி படை பலத்தோடும் வீற்றிருக்கும் பிலாத்து, உலக அரசர்கள் அனைவரினதும் பறிபோடும் அதிகார பகட்டின் அடையாளமாகத்திகழ்கின்றான். உடைந்து நொருங்கிய தோற்றத்தினுள் உயிர் மட்டும் மிச்சமாக இருக்க, முள்முடி அணிந்து பரிகாச போர்வையால் போர்க்கப்பட்டு மூங்கில் கோலுடன் இரத்த உருவமாய் கைகள் கட்டப்பட்டு ''கத்தாத செம்மறியாய்'' காட்சிதரும் அரசர்களுக்கெல்லாம் அரசர் இயேசுக்கிறிஸ்து. ''யூதரின் அரசனா'' எனும் கேள்விக்கு தனது அரசு எவ்வாறானது என இயேசு வழங்கும் விளக்கம் அவரது அரசின்தன்மயினை விளக்கிக் கூறி நிற்கின்றது. (யோவான் 18:36)

இயேசு ஆண்டவர் இந்த உலகின் அரசர் எவ்வாறெனில்,
பிறக்கும் போது தீவனத் தொட்டியில்,
வளரும் போது தச்சுத் தொழில் கூடத்தில்,
பணியின்போது பாதைகள் இருந்த தேசமெங்கும்,
உறவில் ஏழை எளியவர் ஒதுக்கப்பட்டோரில்,
அப்போஸ்தலர் தெரிவில் ஏழை மீனவர்களில்,
செயலில் எப்போதுமே,
அதிகாரமுள்ள விண்ணக மண்ணக அரசனாக இயேசு ஆண்டவர் காட்சி தருகின்றார்.

இயேசுவை அரசனாக்க மக்கள் விரும்பும்போது அவர்களது பேராசையை உணர்ந்து அந்த அரசினை அவர் விரும்பவில்லை. (யோவான் 6:14-15) உண்மையான அரசனும் மேய்ப்பனும் எவ்வாறு இருக்க வேண்டும் என ஆண்டவரே பல இடங்களில் விளக்குவதைக் காண்கின்றோம். உண்மையான மேய்ப்பன் தனது மந்தைக்காக தன்னையே பலியாக்குபவர் எனவும் எடுத்துக் கூறுகின்றார். (1 திமோத் 2:5-6). ஆண்டவர் இயேசுவின் அரசு ஆன்மாக்களைத் தேடும் அரசு. இவ்வுலக அரசுகள் எல்லாவற்றிலும் இருந்து மாறுபட்டு அரசனே தனது மந்தைக்காக உடல், பொருள், ஆவியை தகனப்பலியாக ஒப்புக் கொடுக்கும் அரசு. சாத்தானின் ஆட்சியை ஒழிக்கும் சக்திமிக்க அரசு. படைபலம், ஆள்பலம் இல்லாமல், அரசரே தனது உயிர் ஈந்து போராடி நிலை நாட்டிய அரசு.

**இந்த அரசிற்கு உரித்துடையவர் யார்?**

**அன்பின்** ஆழம் உணர்ந்தவர், அயலவருக்காக வாழ்பவர்,
**ஆணவம்** இல்லாதவர், ஆதிக்க மனப்பான்மையை ஒழித்தவர்.
**இறைவனுக்குப்** பயந்து இம்மைச் சீவியம் கொண்டு விண்ணகம் பெறுபவர்...
**ஈகைத்திறன** கொண்டவர், ஈ காக்கைக்கு கூட துரோகம் செய்யாதவர்.
**உண்மையாக** வாழ்ந்து, அதற்காக போராடி மரிக்கவும் தயாராக இருப்பவர்.
**ஊனமுற்ற** அனைவரையும் அன்பு செய்து அவர்களில் இறைவனைக் காண்பவர்.
**எல்லாம்** இறைவனின் திருக்கரத்திலிருந்தே வருகின்றது என ஏற்றுக் கொள்பவர்.
**ஏற்றம்** தரும் கடவுளின் பாதம் காலையும் மாலையும் தன்னை ஒப்புக் கொடுப்பவர்.
**ஐயம்** தவிர்த்து அழுபவர் கண்ணீர் துடைத்துக் காப்பவர்.
**ஒற்றுமையின்** அடையாளமாய் பிரிவினை தகர்க்க உழைப்பவர்.
**ஓயாது** கண்துஞ்சாது விழிப்பாக இறை பணிக்காய் வாழ்பவர்.
**ஔடதமாய்** சம மனிதனின் துன்பத்தில் தன்னைக் கரைத்து வாழ்வாலும் வார்த்தைகளாலும் மருந்து பூசுபவர்.

மேற்குறிப்பிட்ட பண்புகள் எல்லாம் உண்மையிலேயே கிறிஸ்துவின் அரசிற்கு உரியவை அத்தோடு ஒன்றோடு ஒன்று இரண்டறக் கலந்தவை. இயேசுவை ஆண்டவராகவும் அரசராகவும் ஏற்றுக் கொண்டு இந்த ஞாயிறு திருப்பலியில் பங்குபற்றச் செல்லும் எல்லோரும் இம்மியளவும் பிசகாமல் பின்பற்ற வேண்டியவை.

''நாம் விசுவசிப்பதனை நாம் வாழ்வில் காட்டத் தவறினோம் என்றால்!
இயேசுவை விசுவசித்து ஏற்றுக் கொள்கின்றோம் என்று சொல்வதில் எந்தவித அர்த்தமும் இல்லை.''

''செயலற்ற விசுவாசம் செத்த விசுவாசம்''

## திருவருகைக் காலம் 1ம் ஞாயிறு

**எரேமியா 33:14-16, 1 தெசலோனிக்கர் 3:12 - 4:2 லூக்கா 21:25-28 - 34-36**

### வாழ்க்கை எங்கள் வசப்பட வேண்டும்

இறைவனில் அன்பான எனது சகோதர சகோதரியரே! அட பார்த்தீர்களா? 2008ம் ஆண்டு கிறிஸ்மஸ் இப்பதான் முடிஞ்சமாதிரி இருக்கு, ஆனா 2009ம் ஆண்டு நத்தார் பண்டிகைக் காலம் ஆரம்பமாகி விட்டது. இன்று நாம் திருவருகைக்கால முதல் ஞாயிறு தினத்திலே காலடி பதிக்கின்றோம்.

''ஆண்டவரே இந்த உலகின் அரசர்'' என சென்ற வாரத்திலே கொண்டாடி மகிழ்ந்த எம் அனைவரையும், ''வாருங்கள் வரவிருக்கும் அரசரை ஆராதிப்போம்'' என திருவருகைக்கால முதல் ஞாயிறு தினத்தின் திருப்புகழ் மாலையின் பல்லவி அன்போடு அழைத்து நிற்கின்றது. Advent'' - (அட்வன்ற்) - எனும் சொல்லானது ''Adventus'' (அட்வன்றஸ்) என்னும் இலத்தீன் மொழியில் இருந்து வருகின்றது. இதற்கு ''வருகை'' என்று பொருள். திருவருகைக் காலமானது ஆண்டவராகிய இயேசுவினுடைய இருவேறு வருகையினை எமக்கு மீண்டுமொருமுறை ஞாபகப்படுத்தி, இன்றைய வாசகங்கள் வழியாக எமது வாழ்க்கையினை இன்னும் ஒருமுறை அலசி ஆராய்ந்து பார்த்து, எமக்கு தீர்ப்பிட வரும் இறைவனின் நாளில் அவர்முன் மனத்தைரியத்தோடு எழுந்து நின்று அவரது அரசாட்சிக்கு அழைக்கப்பட்டவர்களாகவும், அவரால் பெயர் சொல்லி அழைக்கப்படுபவர்களாகவும் மாற எம்மை கேட்கின்றது.

பெத்தலகேம் சிற்றூரில் மனித உடல் எடுத்து மரியின் மடியில் தவழ்ந்த இயேசு, சிலுவை மரணத்தினால் மனிதனை மீட்டு, உயிர்ப்பினால் அவனை விண்ணரசுக்கு உரியவனாக்கி அவனைத் தீர்ப்பிட இறுதினாளில் எவ்வாறு வருவார் என்பதனை தாமே இன்று தெளிவாக எடுத்துக்கூறுகின்றார். எனவே இது இயேசு ஆண்டவரை எதிர் கொள்ள எம்மை மனமார ஆயத்தப்படுத்தும் அழகான காலம். உண்மையிலே சொல்லப்போனால், திருவருகைக்கால முதல் ஞாயிறு தினத்தில் தொடங்கி மார்கழி மாதம் 25ம் திகதி சிறப்பான ஆடம்பரங்களோடு கொண்டாடப்பட்டு, திருக்காட்சி விழாவோடு முடிந்து போவதல்ல கிறிஸ்துவின் பிறப்பு விழா. இது சரித்திரங்களுக்கே சவால் விடும் கடவுளின் மனித அவதார மகிமையின் விழா. உண்மையான கிறிஸ்துவின் விசுவாசிக்கு மார்கழி 25 மட்டும்தான் கிறிஸ்மஸ் பண்டிகை என்று சொல்வதற்கில்லை. எப்போதெல்லாம் ஒரு உண்மைக் கிறிஸ்தவ உறுதியான விசுவாசத்தோடு திருப்பலியில் பங்கு கொண்டு திருப்பீடத்தில் மனித உடல் எடுக்கும் இயேசுவை உட் கொள்ளுகின்றானோ அப்போதெல்லாம் அவனுக்கு கிறிஸ்து பிறப்பு விழாவாகவே அமைகின்றது.

கிறிஸ்துவை எதிர் கொள்ள...
எவ்வாறு ஆயத்தமாகுவோம்?

**சிறுகதை**

ஒரு பெரிய செல்வந்தன் அழகிய ஆற்றங்கரையிலே தனது மாளிகையினைக் கட்டி தனது மனைவி பிள்ளைகளோடு சந்தோஷமாக வாழ்ந்து வந்தான். பல வருடங்களுக்கு பின்னர் ஒரு நாள் ரயிலில் தனது வீடு நோக்கி வந்து கொண்டிருக்கும் போது அவனது அந்த அழகான மாளிகையினை சிற்பியுடைய கை வண்ணம் போல் செதுக்கிக் கொடுத்த பொறியியலாளரை சந்திக்க அவனுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. சந்தோஷத்தினை பொறுக்க முடியாத இந்தச் செல்வந்தன் அவரைக் கட்டி அணைத்து அன்று இரவு தன்னோடு தங்கும்படி தனது மாளிகைக்கு கூட்டி வந்தான். இரவு அவனோடு உணவருந்தி அவனை திருப்திப் படுத்திய பொறியியலாளர், தான் கட்டிய அந்த மாளிகையை ஒருமுறை சுற்றிப்பார்த்து ஆராய்ந்தார். பின்னர் வாட்டமான முகத்தோடு அந்த செல்வந்தனை பார்த்து ''இந்த மாளிகையை உடனே நீ விட்டு விட்டு வேறு எங்காவது போக வேண்டும்'' ஏனென்றால் இதன் அத்திவாரம் ஆற்றினால் அரிக்கப்பட்டு இக்கட்டிடம் இன்னும் சில நாட்களில் சரிந்து விழும் தருவாயில் உள்ளது என கவலையோடு அவனை தனியே அழைத்து கூறி அவனிடம் அதிகாலையில் விடை பெற்றுச் சென்றான். தனது மாளிகைக்கு நடக்கப்போகும் நிலையை உணர்ந்த அந்த பேராசை நிறைந்த செல்வந்தன் பொறியியளாளரின் அறிவுரையை அலட்சியப்படுத்தினான். இறுதியில் ஒரு இரவில் அந்த மாளிகை இடிந்து விழுந்து அவனும் அவனது குடும்பம் முழுவதும் உயிர் இழந்தனர்.

இந்த செல்வந்தனுக்கு கிடைத்த அபாய அறிவிப்புத்தான் இன்று இன்றைய நற்செய்தி மூலமாக எமக்கும் கிடைக்கின்றது. இயேசுவின் பிறப்பு ஆயத்தங்கள் நாம் வாழும் இன்றைய காலங்களில் எமது வெளியரங்க ஆயத்தங்களோடு மட்டும் நின்று விடுவது மிகவும் மனம் வருந்துவதற்குரிய செயலாக இருக்கின்றது. இயேசுவின் பிறப்புக் கால ஆயத்தங்கள் மற்றவர்களால் வியாபார மயப் படுத்தப்படலாம், ஆனால் கிறிஸ்தவன், கிறிஸ்தவள் என்று சொல்லும் எம் ஒவ்வொருவரினதும் ஆயத்தம் எவ்வாறு இருக்கின்றது? என நாம் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். குறிப்பாக போரின் பிடியில் முதலில் சிக்கி, பின்னர் முகாம்களின் பிடிகளில் சிக்கி தமது வாழ்வு என்னாகுமோ என ஏங்கித் தவித்து, ஒரு வழியாய் மீண்டும் பல்வேறு பட்ட கட்டுப்பாடுகளுக்கும் கட்டளைகளுக்கும் மத்தியில் எமது சமுதாயத்தில் பிறந்து வந்திருக்கின்ற, தாய், தகப்பன், குழந்தைகள், முதியோர், இளைஞர் யுவதிகள் இன்னும் பெற்றோரை இழந்த குழந்தைகள் மட்டில் எங்களது கிறிஸ்மஸ் பண்டிகையின் ஆயத்தம் எத்தகையது? மேலும் இன்னும் விடுதலையாகாமல் இருக்கும் எம் உறவுகளின் மட்டில் எமது ஆயத்தம் எத்தகையதாக இருக்கப்போகின்றது? என்ற கேள்வி எனக்குள் பெரிதாக எழுந்து நிற்கிறது.

**சிந்தனை செய்து**
**இந்த நத்தார் பண்டிகையை**
**அர்த்தமுள்ளதாக்குவோம்.**

# சேமக்காலை ஒரு புனிதமான இடம்

இ.அ. அமலரட்ணம்

கத்தோலிக்க திருச்சபையின் சத்தியங்களின் ஒன்று ''உடலின் உத்தானத்தை விசுவசிக்கின்றேன்'' என்பதாகும். ''இறுதி நாளில் அனைவரும் உயிர்த்தெழும் போது அவனும் உயிர்த்தெழுவான் என்பது எனக்கு தெரியும்'' (யோவான் 11:23) என்று மார்த்தாள் ஆண்டவன் இயேசுவுக்கு கூறிய வார்த்தையின் மீது நம்பிக்கை கொண்டு இறப்பின் பின்னால் உத்தானம் உண்டு என்பதை விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டு இறைபதம் அடைந்த ஒருவரின் உடலை சேமக்காலையின் கல்லறைக்குள் நல்லடக்கம் செய்கின்றோம். ''கிறிஸ்து இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார் என்று அறிவிக்கப்பட்டிருக்க இறந்தோர் உயிர்ப்பதில்லை என உங்களுக்குள் சிலர் சொல்லிக் கொண்டிருப்பதெப்படி'' (1கொரி 15:12) என்ற புனித சின்னப்பரின் கூற்றும் இறப்பின் பின் உயிர்ப்பு உண்டு என்பதை நாமும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளது.

## அனைத்து ஆன்மாக்கள் தினம்

கார்த்திகை மாதம் 2ம் திகதி இறந்த அனைத்து ஆன்மாக்கள் தினத்தை நினைவு கூருகின்றோம். இந்த நாளில் சேமக்காலைக்கு சென்று கல்லறைகளை சுத்தம் செய்து மலர் தூவி, அஞ்சலி செலுத்தி இறைபதம் அடைந்தவர்களுக்காக இறைவேண்டல் செய்கின்றோம். அத்தோடு இவர்களின் ஆன்மா நித்தியத்திற்கும் இறைவனில் சாந்தி பெறவேண்டும் என்பதற்காக தான தருமங்களை மேற்கொள்கிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக சேமக்காலையில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கற திருப்பலியில் பக்தியோடு பங்கெடுக்கின்றோம். அத்தோடு இறைபதம் அடைந்தவர்களின் சார்பான கடமை முடிந்து விட்டது என்று எண்ணி அடுத்த வருடம் இறந்த ஆன்மாக்கள் தினம் வரை காத்திருக்கின்றோம்.

## புனிதமாக வைத்திருப்போம்

சேமக்காலையில் உள்ள கல்லறைகளில் எம் முன்னோர்கள் இறைவனுக்குள் உறங்குகின்றார்கள் என்பதும் இறுதி நாளில் இறைமகன் இயேசுவின் சாயலாக உயிர்த்தெழுவார்கள் என்பதும் நாம் ஏற்றுக் கொள்கின்ற உண்மை என்று சொன்னால் குறைந்தது இரண்டு மாதத்துக்கு ஒரு தடவை என்றாலும் கல்லறைகளை தரிசித்து மன்றாடுவதோடு, அவற்றை சுத்தம் செய்து துப்பரவாக வைத்திருக்க முயற்சி எடுப்போம். எம் பெற்றோர்கள், உடன்பிறப்புக்கள் எம்மை உருவாக்கிய ஆசான்கள், ஆன்மீக வாழ்வில் எம்மை வழிநடத்திய ஞானத்தலைவர்கள் ஆகியோரை நன்றியோடு நினைத்து இவற்றை செய்வது இவர்களுக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.

## கல்லறைகள் மந்திரிக்கப்பட்டன

கடந்த கார்த்திகை மாதம் 02ம் திகதி மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமான வழிபாடுகள் பல குருக்கள் பங்கு கொள்ள கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. பெருந்தொகையான

(8ம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருக்கள் ஆண்டு
## ஜூன் 2009 - ஜூன் 2010



## குருத்துவ வெள்ளி விழாக் கண்ட அநுராதபுர மறைமாவட்டக் குருமுதல்வருடன்

### ஓர் நேர்காணல் :- [அருட்பணி. அந்தோனி அன்றூ]



1) **கேள்வி** :- அருட்தந்தை அன்றூ அடிகளாரே! நீங்கள் குருத்துவ அழைப்பை உணரக்காரணமான சந்தர்ப்பங்களைக் கூறமுடியுமா?
**பதில்** :- எனது குடும்பத்தினதும், ஆலயச்சூழலினதும் விசுவாசம் அடித்தளமாகும். சிறுவயதிலிருந்தே ஆலயப் பணிகளில் இருந்த அதீத ஈடுபாடும் குருக்களுடனான நெருங்கிய தொடர்பும் நானும் ஒரு குருவாகி, கஷ்டபபடும் மக்களுக்கும், நற்செய்தி அறிவிப்புக்குன்றிய மக்களுக்கும் பணியாற்ற வேண்டும் என்ற மன உந்துதலும் நான் இறை அழைப்பை உணரக் காரணம் எனக் கூறலாம்.

2) **கேள்வி** :- உங்களது குருத்துவ வாழ்விற்கு வழிகாட்டியாக விளங்கியவர்கள் பற்றிக் கூறமுடியுமா?
**பதில்** :- எனது குருத்துவ வாழ்விற்குப் பலர் வழிகாட்டிகளாக விளங்கிய போதிலும் சிலர் இன்றுவரை என்மனதில் நீங்காத இடம் பெற்றுள்ளனர். சிறுவயதில் மறைக்கல்வி கற்பித்த அருட்சகோதரிகளின் உற்சாகமூட்டலும் குறிப்பாக அருட்தந்தை, பொமிக்கல் அடிகளாருடன் எனக்கிருந்த நெருங்கிய தொடர்பும். மேலும் அருட்தந்தையர்களான அல்பிறட், வேதநாயகம், சூசைப்பிள்ளை ஆகியோரின் தளராத வழிப்படுத்தல்கள், நான் குருத்துவ வாழ்வில் இணைவு பெறப் பேருதவியாக அமைந்தது. மேலும் 1976இல் அருட்தந்தையான ஜோய் குணவர்த்தனா அவர்கள் அநுராதபுர மறைமாவட்ட நிர்வாகப் பொறுப்பை ஏற்ற சந்தர்ப்பத்தில்தான், அந்த மறைமாவட்டக் குருவாகப் பணியாற்றும் நோக்கில் கண்டி குருத்துவக் கல்லூரிக்கு அனுப்பப்பட்டேன்.

3) **கேள்வி** :- நீங்கள் யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவராக இருந்த போதிலும், அநுராதபுர மறைமாவட்டக் குருவாகப் பணியாற்றக் காரணம் என்ன?
**பதில்** :- 1976 ஆம் ஆண்டிற்கு முன்பு அநுராதபுர மறைமாவட்டம் யாழ் மறைமாவட்ட ஆயரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கியது. 1972 - 1974 வரை நான் அங்கு மறையாசிரியராக பணியாற்றுவதற்காகவும், திருவழிபாடுகளுக்குச் குருக்களுடன் இணைந்து பணிபுரிவதற்காகவும் அனுப்பப்பட்டேன். மீண்டும் 1976இல் ஆறுமாதகால மறையாசிரியர் சிறப்புப் பயிற்சியை யாழ் மறைக்கல்வி நிலையத்தில், அப்பொழுது மறைக்கல்வி இயக்குனராக இருந்த அருட்தந்தை. தோமஸ் சவுந்தரநாயகம் (தற்போதைய யாழ் ஆயர்) அவர்களின் வழிகாட்டலில் கற்று விசேட தேர்ச்சியுடன் நிறைவு செய்து மீண்டும், அநுராதபுர மறைமாவட்டத்திற்கே மறையாசிரியர் பணியாற்றுவதற்காகச் சென்றேன். அவ்வேளையில் 1976இல் அநுராதபுர மறைமாவட்டம் தனிமறைமாவட்டமாகப் பிரிக்கப்பட்டு அதிவந்தனைக்குரிய ஆயர். ஜோய் குணவர்த்தனா அவர்கள் முழுமையான நிர்வாகப் பொறுப்பை ஏற்ற வேளையில் தான், அவர் என்னை கண்டி குருத்துவக் கல்லூரிக்கு மெய்யியல், இறையியல் கற்பதற்கு அனுப்பினார். 1984 புரட்டாதி ஆறாம் திகதி அநுராதபுர மறைமாவட்டப் பேராலயத்தில் அம்மறைமாவட்டத்தின் முதல் குருத்துவத் திருநிலைப்படுத்தப்பட்டு அங்கேயே எனது பணியை ஏற்றுக் கொண்டமையினால், இன்றுவரை அங்குள்ள தமிழ், சிங்கள மக்களுக்குப் பணிபுரிந்து வருகின்றேன்.

4) **கேள்வி** :- கடந்த 25 ஆண்டுகால குருத்துவ வாழ்வில் நீங்கள் மேற்கொண்ட பணிகளைக் கூற முடியுமா?
**பதில்** :- 1984 (ஆரம்பத்தில்) முதல் பொலநறுவைப் பிரதேசத்தில் அதிக தமிழ் மக்கள் வாழ்ந்து வந்தமையினால் அங்கு தமிழ் குருவானவரின் பணி அவசியமாக இருந்தமையினால் முதலில் உதவிப் பங்குத்தந்தையாகப் பணியாற்றினேன்.

1986 இல் முழுமையாக சிங்கள மக்களைக் கொண்ட கிங்குறாங்கொடையில் உதவிப் பங்குத்தந்தையாகக் கடமையாற்றினேன்.

1987-1991 வரை மதவாச்சியில் முதல் பங்குக்குருவாகப் பொறுப்பேற்று மிகவும் கஷ்டப்பட்ட மக்களுக்குப் பணிபுரியச் சந்தர்ப்பம் கிடைத்தது.

1992 - 2000 வரை அநுராதபுர மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனராகப் பணியாற்றினேன்.
1995 இல் முன்னாள் ஆயர் அதிவந்தனைக்குரிய ஜோய் குணவர்த்தனா அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற 1995-2004 வரை ஆயர் அதிவந்தனைக்குரிய ஒஸ்வெல்ட் கோமிஸ் ஆண்டகை புதிய ஆயராகப் பொறுப்பேற்றார். இவரது தலைமைத்துவத்தின் கீழ் 2000-2002 வரை அநுராதபுர மறைக்கோட்ட முதல்வராகவும் தொடர்ந்து 2004 வரை கலாஓயா புனித லூர்து அன்னையின் புனிதத்தல பரிபாலகராகவும் பணியாற்றினேன்.

2004 இல் புதிய ஆயர் நோபேட் அன்றாடி பொறுப்பேற்ற வேளையில் அவரது தலைமையின் கீழ் அநுராதபுர பேராலயப் பங்குத்தந்தையாகவும், 2006இல் இருந்து இன்றுவரை அம்மறைமாவட்டத்தின் குருமுதல்வராகவும் பொறுப்பேற்று, அனைத்தையும் கிறிஸ்துவின் நற்செய்திக்காக எனும் நோக்கில் செய்து வருகின்றேன். இவற்றுடன் சமூகத் தொடர்பு ஆணையக இயக்குனராகவும், அன்பிய இயக்குனராகவும், குடும்ப நலத்துறைப் பொறுப்பாளராகவும் ஏனைய எனது பணிகள் விஸ்தரிக்கப்பட்டிருந்தன.

5) **கேள்வி** :- உங்களது மறைமாவட்டத்தில் தமிழ் கிறிஸ்தவர்களும் வாழ்கின்றார்களா? சிங்கள கிறிஸ்தவர்களுடன் அவர்களின் பணிகள் எவ்வாறு விளங்குகின்றன?
**பதில்** :- நாம் கிறிஸ்தவர்கள் என்று நோக்குகையில் அனைவரும் இறைசாயலைக் கொண்ட மக்கள். அந்த வகையில் 1990 இற்குப் பின்பு பெரும்பாலான தமிழ் மக்கள் இப்பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து விட்டனர், ஆயினும் குறைந்தளவு தமிழ் கிறிஸ்தவர்கள் இருப்பினும் அவர்களும், சிங்கள மக்களும் புரிந்துணர்வுடனும் விட்டுக் கொடுப்புடனும் பல பணிகள், ஒன்றுகூடல்கள், விழாக்கள் போன்றவற்றில் ஒன்றித்துச் செயல்படுவது சுமுகமான சமூக உறவிற்கு உதாரணமாக விளங்குகின்றது. மேலும் இங்குள்ள இந்து, பௌத்த, முஸ்லிம் மத மக்களுடனும் கிறிஸ்தவ மக்கள் நல்லுறவுடன் வாழ்ந்து வருகின்றனர் என்பதில் குறிப்பிடத்தக்கது.

6) **கேள்வி** :- அதிக சிங்கள மக்கள் மத்தியில் குருத்துவப் பணிபுரியும் நீங்கள் பெற்றுக் கொண்ட நன்மைகள், முகங்கொடுத்த சவால்கள் பற்றிக் கூறமுடியுமா?
**பதில்** :- நான் நீண்ட காலமாக அவர்களின் மத்தியில் பணியாற்றி வருவதால் அவர்களின் ஒருவராகவே அம்மக்களினால் அன்புடன் ஆதரிக்கப்பட்டு என் பணிகளை இடர்கள் மத்தியிலும் உற்சாகத்துடனும் மேற்கொள்ளக் கூடுமாக உள்ளது. பல இன, மத, மொழிகளுடைய மக்கள் மத்தியில் பற்பல பணிகள் புரிய சந்தர்ப்பம் கிடைத்தமை ஓர் இறை கொடை என்றே கூறுவேன். குருத்துவத்தின் மறுவடிவம் சேவை செய்தல், எனவே எல்லோருக்கும் எல்லாமாக இருந்து, புரிந்துணர்வுடன் அனைவரையும் ஏற்றுக் கொண்டு, உண்மையான அழைப்பின் ஆழத்தை உணர்ந்து, சேவை செய்யக்கூடுமான ஒத்துழைப்பு உண்டு.

இருப்பினும் சில சவால்கள் என் மனதில் ஆழமான முள் போன்று தைத்துள்ளது. முதலாவது எனது அன்னையின் மரணச் சடங்கில் (1990இல்) நான் நாட்டுப்பிரச்சினை காரணமாகப் பங்கேற்க முடியாது தவித்தமை. இரண்டாவது நீண்ட காலப் போரின் தாக்கத்தால் அல்லலுறும் மக்களுக்கு என்னால் இயன்றவரை பணி செய்ய முடியாதுள்ளமை. எனினும் அண்மைக் காலத்தில் இடம் பெற்ற போர் அனர்த்தத்தினால் பாதிப்புற்று அநுராதபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காவது என்னால் இயன்ற உதவிகளை மேற்கொண்டேன் என்ற திருப்தியுண்டு.

7) **கேள்வி** :- அருட்பணி வாழ்வின் ஆழத்தை அனுபவ வாயிலாகக் கண்டுணர்ந்த நீங்கள் இன்றைய இளைய தலைமுறையினருக்குக் கூறும் செய்தி என்ன?
**பதில்** :- ஒரு கிறிஸ்தவன் எந்த நிலையில் தனது அழைப்பை ஏற்றாலும் இறையரசைப் பரப்புவதே தனது முக்கிய இலக்கு என்பதை நாம் அனைவரும் குறிப்பாக இளைய தலைமுறையினரும் ஏற்று உணர்ந்து செயற்பட வேண்டும் இறை அழைத்தல் ஓர் மர்மமானது. அதனை கூடிய மட்டும் செபத்தின் மூலம் உய்த்துணர முடியும். இதனை உணரும் இளையோர் தாமாக மனமுவந்து தம்மை இறைபணிக்கு அர்ப்பணிக்கவும் பின்வாங்கக் கூடாது. அத்துடன் அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப தமது ஆன்மீக வாழ்வையும் சமாந்தரமாகவும்; கூடுமானால் அதனிலும் சிறப்பாகக் கடைப்பிடித்து உத்தம கிறிஸ்தவ வாழ்வு வாழ்ந்து இறையரசை அடையும் நோக்கத்தையும் தம் இலக்காகக் கொண்டு வாழ வேண்டும்.

பல, இன, மத, மொழிகளுடைய மக்கள் மத்தியில் தாங்கள் ஆற்றிவரும் அருட்பணிகள் யாவும் இறையருளால் ஆசிபெற பாதுகாவலன் அன்பு நெஞ்சங்கள் சார்பாகவும் வாழ்த்தி நிற்கின்றோம்.

நேர்காணல் :- S.M. வுறோறன்ஸ்

## இறை தியானக் குருக்களே

குருக்களின் ஆண்டாம் இவ்வாண்டினிலே
குருத்துவத்தின் மேன்மையை உணர்ந்தவர்களாக
குழுமமாகக் கூடி இறை தியானத்தின் ஈடுபடும்
குருக்களே உங்களை நாம் நினைத்துத்தான் செபிக்கின்றோம்

ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு கிழமை
ஒன்றுபட்ட உள்ளத்துடன் இறைவனை வேண்டி
ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் பேராயிரம் மக்களுடன்
ஒத்துழைத்து செயற்பட இருக்கும் குருக்களே வேண்டுகின்றோம் உங்களுக்காய்

பரிசுத்தமான கரங்களும் உங்கள் உதடுகளும்
பழுதின்றி இருக்கப் பரமனை நாம் வேண்டுகின்றோம்
பண்படுத்தும் உங்கள் உள்ளங்கள் பண்படுத்தப்படவும்
பக்தியும் பரவசமும் உயர்ந்து ஓங்கிடவும் இறைஞ்சுகின்றோம் உங்களுக்காய

உடல் நலமும் உளநலமும் ஆன்மீக பலமும்
உங்களில் நிலைத்து நின்றிடவும்
உன்னதரின் வார்த்தைதனை ஊரெங்கும்முழங்கிடவும்
உள நிறைவுடன் உங்களை வாழ்த்தியே நிற்கின்றோம்.

திருமதி. செல்வராணி ஞானரட்ணம், சுன்னாகம்.

## குருக்களுக்காய் இறையருள் வேண்டுவோம்

நித்திய குருவாம் இறைமகன் இயேசுவின்
பாதச் சுவட்டை பணிவோடு பின்பற்றி
இறையாட்சிப் பணிதனை மண்மீது தொடர்ந்திடும்
குருக்களின் நலனுக்காய் இறையருள் வேண்டுவோம்

தூயநல் ஆவியின் நிறையருள் பொழிவோடு
தோளினை அழுத்திடும் சிலுவையைச் சுமக்கவும்
பாலைநில இயேசுவைப்போல் சோதனையை வெல்லவும்
வலுவினைக் கொடுத்திட இறைவனை வேண்டுவோம்

கல்வாரி குன்றின்மேல் நடந்திட்ட பலிதனை
குருதி சிந்தாமல் பலிப்பீடம் தனில்நின்று
மீட்பினை நாம்பெற எமக்காகத் தந்திடும்
குருக்களின் வாழ்வுக்காய் இறையருள் வேண்டுவோம்

இறையரசு மலர்ந்திட வார்த்தையை அறிவித்து
இயேசுவின் அருள்கொண்டு பிணிகளை நலமாக்கும்
ஆன்மீக நலன்தனை எல்லோர்க்கும் வழங்கிடும்
குருக்களின் பணிக்காய் இறைவனை வேண்டுவோம்

சாரமுள்ள உப்பாக பணிவாழ்வில் கரைகின்ற
ஒளிதந்து தனையிழந்து எமக்காக அழிகின்ற
புளிக்காரம் போலிருந்து திருமறையை வளர்க்கின்ற
எம்மினிய குருக்களுக்காய் இறையருள் வேண்டுவோம்.

இ. அ. அமலரட்ணம்
யாழ் பேராலயம்.

## பங்குகளிலிருந்து...

### புங்குடுதீவு பங்கில் சேவை நலனுடன் பணியாற்றும் மறைக்கல்வி மற்றும் மாலை நேர ஆசிரியர்களின் கற்பித்தல்

எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆவார் என்ற கூற்றுக்கு இணங்க சேவை உள்ளத்துடன் பணியாற்றும் ஆசிரியர்களை கௌரவித்தல் நிகழ்வு மறைக்கல்வி மாலை நேர மாணவர்களால் கடந்த 11.10.2009 அன்று ஒழுங்குபடுத்தப்பட்டு புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் மாணவத் தலைவன் நி. அன்ரனி செசிலி தலைமையில் இடம் பெற்றது. அத்துடன் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தீவகவலய பிரதி கல்வி பணிப்பாளர் திரு. குயின்வாஸ் அவர்களும் மற்றும் அயற்பாடசாலை அதிபர்கள், சர்வோதய அறங்காவலர், சிவன்தேவஸ்தான குருக்கள் ஆகியோர் இந்நிகழ்விற்கு வருகை தந்திருந்தனர். இந்நிகழ்விற்கான காலைத்திருப்பலி புனித பிரான்சீஸ் சவேரியார் ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்பணி. லீயோ ஆம்ஸ்ரோங் அடிகளால் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

தொடர்ந்து அன்றைய தினம் வருகை தந்த பிரதம விருந்தினர் தமது உரையின் போது ''பணிகள் எத்தகைய பரப்பில் இருந்தாலும் அதை சேவை மனப்பாங்குடன் செய்வதே மேன்மையானது" என்ற கருத்தையும் அன்றைய தினம் கையேட்டு சஞ்சிகையும் அவர் ஆய்வு செய்து அத்துடன் மாணவரின் திறமைகளை வெளிகாட்டுவதற்கு இது ஒரு களம் எனவும் கூறினார். இவ்வாறாக அன்றைய தினம் வருகை தந்த அனைவரும் உரையாற்றினார்கள். பின்னர் பங்குத்தந்தை அவர்கள் உரையாற்றுகையில் பணி என்பது வேதனம் பெறுவதல்ல என்றும் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க எமது றோமன் கத்தோலிக்க பாடசாலையை ஆரம்பித்து வைக்க ஆவலாய் இருப்பதனையும் கூறினார். மேலும் மறைக்கல்வி மாலை நேர ஆசிரியர்களை மாணவர்களும் பெற்றோரும் கௌரவித்து தமது நன்றிகளை அன்பளிப்பு மூலம் கௌரவித்து இந்நிகழ்வினை சிறப்பித் தார்கள். மேலும் எமது பங்குத்தந்தை அவர்களின் வழிநடத்தலிலும் அருட்பணிச் சபையினரின் பங்களிப்பிலும் அனைத்து விடயங்களும் ஒழுங்கு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அ. மீறா, புங்குடுதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்ம உணவாண்டவர் உறவு

– அருள்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் –



ஊடகவியலாளர்கள் அன்னை திரேசாவிடம் "உங்கள் பணிக்கான சக்தியை எங்கிருந்து பெற்றுக்கொள்கின்றீர்கள்?" எனக் கேட்டபோது, அவர் தமது மடத்திலுள்ள சிற்றாலயத்திற்கு அவர்களை அழைத்துச் சென்று நற்கருணைப் (ஆன்ம உணவாண்டவர்) பேழையைச் சுட்டிக்காட்டி. "இதற்குள் இருக்கும் இயேசுவிடமிருந்தே எனக்குச் சக்தி கிடைக்கின்றது" என்றார். பலரது இதயங்களில் ஆழமான பதிவுகளை விட்டுச்சென்ற இவர் ஆன்ம உணவாண்டவரின் பிரசன்னத்தில் அதிக நேரம் கழிப்பவர். அதனால் தான் அவரது ஆளுமையும் பணியும் பலருக்குப் பயனளிப்பதாக அமைந்தது. அவ்வாறே புனித மரிய வியான்னியும் ஆன்ம உணவாண்டவரில் ஆழமான பக்தி கொண்டவர். அதிகாலைவேளை எழும்பி அவர் முன்னிருந்து செபிப்பார். இதனால் இறைவனது ஞானம் நிறைந்திருந்தார். அவரது மறையுரைகள் பலரை மனம்மாற வைத்தன. அவர் ஆர்ஸ் பங்கிற்குச் சென்றபோது வெறிச்சுப் போய்க் கிடந்த கோயிலிலே மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. இவ்வாறு பல புனிதர்கள் ஆன்ம உணவாண்டவருடன் நெருக்கமான உறவுகொண்டு வாழ்ந்தனர். இன்றும் கத்தோலிக்கர்கள் பலர் ஆலயத்தில் வந்து ஆன்ம உணவாண்டவர் முன் அமர்ந்திருந்து அவரோடு தம் வாழ்க்கையைப் பகிர்ந்து புது வாழ்வு பெறுவதைக் காண்கின்றோம். இதன் வளர்ச்சியாக சில ஆலயங்களின் ஒரு பகுதியில் ஆன்ம உணவாண்டவர் சிற்றாலயம் கட்டப்பட்டு மக்கள் பலர் தாமாகவே விரும்பி அங்கு சென்று தனியாகவோ குழுவாகவோ அவரோடு உறவாடுவதைக் காண்கின்றோம். ஆனால் பெரும்பான்மையானோர் இவ்வாறு ஈடுபடுவதில்லை என்பதும் உண்மையே.

## ஆன்ம உணவாண்டவரிடம் வரவிடாது தடுக்கும் மதில்கள்

நாம் ஆன்ம உணவாண்டவரின் பிரசன்னத்தில் ஆறஅமர்ந்து நேரம் கழிக்க விரும்புகின்றபோதும் அதற்குத் தடைகள் பல உருவாகுகின்றன. அதற்கான சிலகாரணிகளை இங்கு நோக்குவோம்.

1. **தீயசக்தி :** அவர் பிரசன்னத்திற்கு வருவதை தடுக்கும் தடைகளில் மிக முக்கியமானது தீயசக்தியாகும். இறைவார்த்தை நமது இதயத்தில் பதிந்து பலன்கொடுக்க விடாதபடி எவ்வாறு அலகையானது அவ்விதைகளை நம் இதயத்திலிருந்து எடுத்து விடுகின்றதோ (லூக். 8:12) அவ்வாறே ஆன்ம உணவாண்டவருடன் உறவாடுவதற்கான ஆவல், முயற்சி என்பனவற்றில் நாம் முன்னேறாதிருக்க அது நமக்குள் பல தடைகளை உருவாக்குகின்றது. பின்வரும் தடைகளை உருவாக்கும் சக்தியாக அலகையைக் குறிப்பிடலாம்.

2. **பாவப்போக்கு:** ஆன்ம உணவாண்டவர் பிரசன்னத்தை நாடும்போக்கு நம் ஆன்மாவில் இறைவனால் பதிக்கப்பட்டிருந்தாலும், அவரது பிரசன்னத்தை விலக்கும் போக்கும் நம் மனப்பரப்பில் மறைந்து செயற்படுகின்றது என்பது அனுபவ உண்மை. தான் விரும்புவதைச் செய்யவிடாது தடுத்து விரும்பாததைச் செய்யவைப்பது பாவம் எனப் புனித பவுல் கண்டதும் (உரோ 7:14-25) இப் போக்கையேதான். புனித லோயலா இஞ்ஞாசியார் கருத்துப்படி செபத்தை நாம் விரும்பாதிருப்பதற்கு பாவம் காரணம். இதனையே இரக்கமுள்ள தந்தை உவமையில் வரும் இளைய மகனும் குறையேதும் வைக்காத தன் அன்புத் தந்தையின் பிரசன்னத்தை விலகிச் சென்றமை விளக்கி நிற்கின்றது (லூக் 1511-13).

3. **பாவப் பழக்கங்கள்:** நமது பாவப் பழக்கங்கள் அலகை குடிபுகுந்து நம்மைக் கட்டுப்படுத்தும் கோட்டையாக அமைகின்றன. நிறைவுகொண்ட ஏதேன் தோட்டத்தில் தொடக்கநிலைப் பெற்றோர், அன்பு நிறைந்த இறைவனின் பிரசன்னத்தை மறந்து பாவத்தில் வீழ்ந்து, அவர் வரும்போது அவரது பிரசன்னத்தை விட்டு ஒளிந்து கொண்ட நிகழ்வு இதற்கு ஒரு உதாரணம். "தீங்கு செய்யும் அனைவரும் ஒளியை வெறுக்கின்றனர். தங்கள் தீச்செயல்கள் வெளியாகிவிடும் என அஞ்சி அவர்கள் ஒளியிடம் வருவதில்லை (யோவா. 3:20). ஆன்ம உணவாண்டவர் பிரசன்னத்தை விலக்குவோரிலும் இத்தகைய செயற்பாடே நிகழ்கின்றது.



4. **பற்றுக்கள்:** செபவாழ்வில் ஆர்வம் குறைவதற்கு அல்லது அற்றுப்போவதற்கு ஆட்கள், பழக்கங்கள், பொருட்கள்... மீதான மட்டற்ற பற்றுகள் காரணமாக அமைகின்றதென புனித லோயலா இஞ்ஞாசியாரே எடுத்துக் கூறியுள்ளார். கடவுளின் திருவிருப்பத்திற்கு ஒவ்வாத ஆசைகள், பற்றுகள், ஏற்படும்போது அவற்றிற்கே அதிக நேரம் ஒதுக்குவதும், அவைபற்றியே மனதில் சதா சிந்தித்துக்கொண்டிருத்தலும் இடம்பெறுகின்றது. இதனால் ஆன்ம உணவாண்டவரை விலக்கும்போக்கும் வலுவடையத் தொடங்கும். நிறைவும் நிம்மதியும் கொடுத்த இயேசுவின் அன்பைவிட்டு பணத்தை நாடித் தன் வாழ்வை அழித்த யூதாசின் கதையும் இதையே காட்டி நிற்கின்றது. இறைவனுடைய திருவிருப்பத்தின்படி வாழாதவர்களோடு கொண்டிருந்த அவனது தொடர்பு, படிப்படியாக இயேசுவையும் திருத்தூதர் குழாமையும் விலகிச் செல்ல வைத்து, இறுதியில் அலகை அவனுள் புகுந்து அழித்ததைப் பார்க்கின்றோம்.

5. **பேராசைகள்:** இறைவனின் திருவிருப்பத்திற்கு உட்பட்டதா என எடைபோட்டுப் பார்க்காது நமக்கென சுயநலமான அல்லது யதார்த்தமற்ற இலட்சியங்களை உருவாக்குவதும் அவற்றை அடைய முடியாதபோது ஏற்படும் ஏமாற்றத்திற்கு இறைவன்மீது குற்றம்சாட்டுவதும் ஆன்ம உணவாண்டவர் பிரசன்னத்தை விலக்கச் செய்யும். இது அவரைத் தவறாகப் புரிந்ததன் விளைவே.

6. **ஏமாற்ற அனுபவங்கள்:** நாம் விரும்புவதை நாம் விரும்பும் நேரத்தில், விரும்பும் விதத்தில் ஆன்ம உணவாண்டவர் நமக்குத் தரவேண்டும் என்று விரும்புகின்றோம். அவ்வாறு அவர் நமக்குத் தராதபோது அவர் மீது ஏமாற்றம் கொண்டு அவரோடு உறவாடுவதால் பயனில்லை என்ற தவறான முடிவெடுத்து அவரை விலக்கத் தொடங்குகின்றோம். ஆனால் ஏமாற்ற அனுவங்களையும் அவ்வுடைய பிரசன்னத்திற்குக் கொணர்ந்து மனம்விட்டுப் பகிரும்போது அவற்றுள்ளும் அவரின் அன்புக் கரம் பற்றிப் பிடித்துச் செயலாற்றுவதை அடையாளம் காணமுடியும். யோனா தன் ஏமாற்றத்தாலே மனமுடைந்து ஆண்டவர் பிரசன்னத்தை விலக்கி முசுக்கொட்டைச் செடியின் நிழலில் தற்காலிக இன்பம் கண்டதும் இதைத் தான் வெளிப்படுத்துகின்றது.

7. **மனக்காயங்கள்:** வாழ்க்கையிலே பல்வேறு காரணிகளால் மனக்காயங்கள் ஏற்படும்போது, வாழ்வில் பல துன்பங்கள், இழப்புகள்.... தொடர் சங்கிலியாகத் தொடரும் போது அவர் ஏன் என் துன்பங்களைத் தடுத்து நிறுத்தவில்லை, அவற்றிற்கு ஏன் முற்றுப்புள்ளி வைக்கவில்லை என்று வினாத் தொடுக்கின்றோம். இது வேதனையைத் தாங்க முடியாத நமது இயலாமையின் வெளிப்பாடு. ஆனால் இத்தகைய மனக்காயத்தால் ஆன்ம உணவாண்டவரைத் தப்பாகப் புரிவதால் அவரை விலக்கும் போக்கு குடிகொள்ள ஆரம்பிக்கின்றது.

8. **சோம்பல்:** பாவத்தைப் பிறப்பிக்கின்ற ஏழு முக்கிய காரணிகள் எனத் திருச்சபை கூறுவனவற்றில் சோம்பலும் ஒன்று. சோம்பலுக்கு இடம்கொடுப்போர், ஆன்ம உணவாண்டவர் பிரசன்னத்தில் கழிக்கும் ஆவல் மனதில் தோன்றும்போது "பின்னேரம் போவம், நாளைக்குப் போவம்" எனப் பின்போட்டு இறுதியாக அவர் பிரசன்னத்தை மறக்கும் நிலையே உருவாகின்றது.

(அடுத்த இதழில் தொடரும்...)

## மறை அறிவிப்பு பணியாளர்களின் பாதுகாவலர் புனித பிரான்சிஸ் சவேரியாரே!

அருட்சகோ. றமேஸ் அ.ம.தி



தூய ஆவியார் தரும் புது படைப்பு அனுபவம் ஒரு இன்றைய அனுபவம் என்பதால் அது பலருக்கு பலவிதமாக வருகிறது. பொதுவாக இரண்டு வகையில் ஏற்படுகிறது. மறைவானதும் கண்ணுக்கு புலப்படாததுமானது ஒன்று, வெளிப்படையாக எல்லோரும் காணக்கூடிய விதத்தில் வருவது மற்றொன்று. யோர்தான் நதிக்கரையில் ஆண்டவர் இயேசுவின் மேலும், பெந்தகோஸ்தே தினத்தன்று அன்னை மரியாள் மேலும், திருத்தூதர்கள் மேலும், தமஸ்கு நகரில் புனித பவுலின் மேலும், காலத்துக்கு காலம் இறை நெறியில் வாழ்ந்த புனிதர்கள் மேலும் நிழலிட்ட ஆவியானவர், பாரீஸ் பல்கலைக் கழக பேராசிரியரான பிரான்சிஸ் சவேரியார் மேலும் இறங்கினார். கீழைத்தேச நாடுகளுக்கு இறைவனின் நற்செய்தியைக் கொண்டு செல்லும் தூதுவராகவும், அந்த இடங்களில் திருச்சபையை நிலை நாட்டும் இறைவனின் கருவியாகவும் அவரை ஏற்படுத்தினார்.

கி.பி 1506 இல் ஸ்பெயின் நாட்டில் ஒரு அரச குடும்பத்தில் பிறந்த புனித சவேரியார் தனது பதினெட்டாவது வயதில் தனது மேற்படிப்புக்காக பாரீஸ் நகருக்கு சென்று அங்குள்ள பல்கலைக் கழகம் ஒன்றில் தனது உயர் கல்வியை மேற்கொண்டார். அவருக்கென ஒரு எதிர்காலம் பொன்மயமாகக் காத்திருந்தது. எல்லா இளைஞர்களைப் போலவே தனது எதிர்கால வாழ்கையை முன்னிருத்திய புனித சவேரியார், தனது கல்வி அறிவாலும் பேச்சுத்திறனாலும் வரலாற்றில் நிலையான இடத்தை பெற்று மக்கள் மனத்தில் என்றும் வாழ விரும்பினார். நில்லா உலகின் நிலையற்ற புகழினை நீர்க்குமிழி என சிந்திக்கத் தூண்டி, இவரது நித்திய புகழுக்கு வித்திட்ட பெருமை புனித இஞ்ஞாசியாரையே சாரும். சவேரியாரை சந்திக்கின்ற பொழுது இஞ்ஞாசியார் அடிக்கடி எழுப்பும் வினா: "ஒருவர் உலகம் முழுவனையும் தமதாக்கிக் கொண்டாலும் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்கு பயன் என்ன?" (லூக் 9:25). புனித இஞ்ஞாசியார் தான் பெற்ற இறை அனுபவத்தினூடாக இறையுண்மைகளை சவேரியாருக்கு விளக்கி அவர் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தினார். அன்று முதல் இறைமகன் இயேசுவையே தன் ஆதாயமாக எண்ணிய புனித சவேரியார் இயேசுவின் நற்செய்திப் பணிக்காக தன் உடலையும், உயிரையும் அர்பபணித்து வாழத் தொடங்கினார்.

தன் சொந்த நாட்டை விட்டு, உற்றார் உறவினரைத் துறந்து, கடல் கடந்து இந்தியாவை அடைந்தவர் ஊரெங்கும் சுற்றித் திரிந்து உண்மை மறையைப் போதித்தார். சிறு மணி ஒலியை எழுப்பி சிறுவர்களைத் தம்மிடம் கவர்ந்தார். மணியின் ஒலி கேட்டு ஒன்று கூடிய மக்களுக்கு இயேசுவின் திருச்சிலுவையைக் காண்பித்தார். வேதப் புத்தகத்தைக் கொண்டு திருச்சிலுவைக்கு விளக்கம் கொடுத்தார். துன்பங்கள் நிறைந்த மனித வாழ்வை சிலுவைக்கு ஒப்பிட்டு, அந்தச் சிலுவையின் வழியாகத்தான் மீட்பு உண்டு என்பதனை தான் சென்ற இடமெல்லாம் போதித்தார். இறை மகன் கிறிஸ்துவின் வாழ்வையே எடுத்துக்காட்டி அதற்கு சான்று பகர்ந்தார். "மிகுதியாக சேகரித்தவருக்கு எதுவும் மிஞ்சவில்லை குறைவாக சேகரித்தவருக்கு எதுவும் குறைவு படவில்லை" (2கொரி 8:15) என்ற புனித பவுலினது வார்த்தைகளுக்கு தன் வாழ்வால் விளக்கம் தந்தார். "இறைவனை அறியாத ஓர் இடம் பூமியில் இன்னும் இருக்கிறது என்று அறிவேனானால் என்னால் இனிமேல் இளைப்பாற முடியாது" என்ற இவரது வார்த்தைகள் இயேசுவின் நற்செய்தி பணியின் மேல் இவர் கொண்ட தாகத்தை விளக்கி நிற்கின்றன.

இந்தியா, யப்பான் முதலாக பல நாடுகளுக்கு அண்ணளவாக ஒரு இலட்சம் மைலகள் தூரம் சென்று கிறிஸ்துவுக்கு சான்று பகர்ந்து வேதம் போதித்த பெருமை புனித சவேரியாரையே சாரும். செபத்தின் மூலமான இறைவனுடன் ஒன்றித்த வாழ்வு மட்டுமே, நிலையற்ற இவ்வுலகில் அமைதியான இளைபபாற்றியைக் காண முடியும். இறைவன் பால் உந்தப்பட்டு சாவாயினும் அதனை எதிர் நோக்கி வாழ்வதில் தான் நிம்மதி உண்டு என்று, புனித சவேரியாரின் வாழ்வில் இருந்து நாங்கள் ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ள முடியும். புனித சவேரியார் இவ்வுலகில் வாழ்ந்த போது தன்னை மறைத்து இறைவனை வெளிப்படுத்தினார். புனித சவேரியார் இறந்த போது இறைவன் அவரை உடல் அழியா உத்தமராக்கினார். அவர் இயேசுக் கிறிஸ்துவை எவ்வளவு தூரம் நேசித்தார்! மக்கள் கிறிஸ்துவை அறிந்து நேசிக்க வேண்டும் என்பதற்காக எவ்வளவு அதிகமாக உழைத்தார்! ஆத்துமாக்களை மீட்க எத்தனை துன்ப துயரங்களை அனுபவித்தார். அவருடைய முன்மாதிரிகையான வாழ்வு எங்கள் அனைவருக்கும் ஓர் எடுத்துக்காட்டாகவும், எழுச்சியாகவும் முன்னிருக்கட்டும்.

## மாணவர் பக்கம்

### அழிவின் துளி...

பஞ்சணையில் படுத்துறங்கி
பள்ளிக்கூடம்
செல்லும் வயதில்
பாலகனை
பசிபட்டினியால் பதைக்க
வைத்து
படிக்கட்டில் படுத்து
உறங்க
செய்தது இந்தப்பாழாய் போன
யுத்தம்தானே!

அன்ரனி தனுசியா
பாஷையூர், யாழ்ப்பாணம்.

**செல்வம்**
இது இருந்தால் உலகம் உன் கையில்
இல்லாவிட்டால் நீ உலகின் கையில்

**காதல்**
இன்றைய தலைமுறையின் கல்வியைக குலைத்து கல்லறைக்கு வழிகாட்டுவது.

**கைத்தொலைபேசி**
பாவனைக்கு இனிமை
எதிர்காலக் கொடுமை

**நட்பு**
அன்றைய நட்பு ஆழ்கடல்
இன்றைய நட்பு சுயநலம்

ப. பலோமியற்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநிலையினர் வாரம் சிறப்பு மலர்

## எழுக!

ஒரு முறை ஒரு அரசவையில் அரசனை வாழ்த்த புகுந்த ஔவையார் ''வரப்புயர'' என்று வாழ்த்தினாராம் அரசனை வாழ்த்த வந்த ஔவையார் ஏன் வரப்புயர என்கிறார் என்று அவை குழம்பி நின்ற போது ''வரப்புயர நீர் உயரும் நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோன் உயர்வான்'' என்று விளக்கம் கூறினாராம் ஔவைப்பாட்டி. அது போல மண் விண்ணாக வேண்டுமென்றால் இறையாட்சியின் விடியல் சித்திக்க வேண்டுமென்றால் ''பொது நிலையினரே எழுக'' என்று தான் நாமும் வாழ்த்த வேண்டியிருக்கிறது. எங்கு முதிர்ச்சியடைந்த பொது நிலையினர் இல்லையோ அங்கு திருச்சபை ஊன்றப்படவில்லை என்று இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு கூறுகின்றது. பொது நிலையினரின் எழுச்சியே திருச்சபையின் வளர்ச்சி; இறையாட்சியின் மலர்ச்சி - இவ்வாண்டுக்குரிய பொதுநிலையினர் தினத்தை எதிர் கொள்ளும் போது நாம் அனைவரும் மனங் கொள்ள வேண்டிய முக்கிய உண்மை இதுவாகும்.

### எழுச்சி கண்டு வரும் பொது நிலையின்

இரண்டாம் வத்திக்கான் சங்கம் விடுத்த 'திருமுழுக்குப் பெற்ற திருச்சபையின் அங்கத்தவர் அனைவரும் சமத்துவம் பெற்ற இறைமக்களே' என்ற அறைகூவல் திருச்சபையில் எதிரொலிக்கத் தொடங்கிய போது பொது நிலையினர்விழிப்பு ஆரம்பமாகத் தொடங்கியது. இன்று உலகின் பல்வேறு நாடுகளிலும் பொதுநிலையினர் திருச்சபையில் தமது உரிமைகளையும், கடமைகளையும் மீளக் கண்டு பிடித்து நிலைநிறுத்தி வருகின்றனர். திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் அருள் பணியாளர், துறவிகளுடன் இணைந்து பங்கேற்பது தமது அடிப்படை அழைப்பு என்பதை அவர்கள் உணர்ந்து வருகின்றனர். குறிப்பாக ஆவியில் புதுப்பித்தல் இயக்கம், அடித்தள கிறிஸ்தவகுழும இயக்கம் (அன்பிய இயக்கம்) போன்ற சமகால போக்குகள் பாரம்பரிய பொது நிலையினரின் பக்தி சபை இயக்கங்களோடு இணைந்து திருச்சபையின் வாழ்விலும், பணியிலும் பொது நிலையினர் தமது இடத்தை மீளப் பெற்றுக் கொள்ள பெரும் பங்காற்றி வருகின்றனர்.

இவ்வகையில் எமது மறை மாவட்டத்திலும் இத்தகைய பாரம்பரிய மற்றும் நவீன அமைப்பக்கள் வீச்சோடு இயங்கி வருவது நம்பிக்கை தருவதாக இருக்கிறது. மேலும் மறைக்கோட்ட மறைமாவட்ட பொதுநிலையினர் கழகங்களும் பொதுநிலையினரின் பங்கேற்பின் அவசியம் பற்றி விழிப்புணர்வோடு இயங்கி வருவது நிறைவு தருகிறது. இவ்வாண்டு வரும் பொதுநிலையினர் தினமும் 29.11.2009 அன்று நடை பெறவுள்ள பொது நிலையினர் மாநாடும் இப்போறகிற்கு புதுச் சக்தி அளிக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

### பங்கேற்பு அமைப்புக்களை பலப்படுத்துவோம்

அனைவரும் இறைமக்களே, திருச்சபையின் பணி இறையாட்சியே, இது கூட்டுப் பொறுப்பு, அனைவரும் பங்கேற்க வேண்டும் போன்ற சொற் தொடர்புகள் வெற்றுக் கோஷங்களாகவும் வாய்ப்பாடாகவும் மாறி விடாதிருக்க தேவையான பங்கேற்பு அமைப்புகள் அனைத்து மட்டங்களிலும் ஏற்படுத்தப்படுவது அவசியமாகும். இன்று அடித்தள பங்கேற்பு அமைப்பாக இருக்கும் பங்குகளின் போதாமை காரணமாக அன்பியங்களை பொது நிலையினருக்குரிய வேரோட்டமாக பங்கேற்பு அமைப்பாக கருதும் போக்கு வளர்ந்து வருகின்றது. உண்மையில் பல தலத்திருச்சபைகளில் அன்பியங்கள் மிகச்சிறந்த பங்கேற்பு வாழ்க்கை முறையாக தம்மை அடையாளப்படுத்தி உள்ளன.

அவ்வகையில் அன்பியங்களை கட்டி எழுப்புவதும் அவற்றிலிருந்து மேலெழுந்து வரும் அருள்பணி அமைப்பு முறைகளை ஆலயபங்கு மட்டத்திலும் மறைக்கோட்ட, மறைமாவட்ட மட்டத்திலும் வளர்த்தெடுப்பதும் அவற்றில் சுழற்சி முறை பொறுப்புக்களை ஏற்படுத்துவதும் பொது நிலையினரின் பங்கேற்பை உச்சமாக்கும். பொதுநிலையினரின் பங்கேற்பை விரும்புபவர்கள் இவ் விடயத்தில் அக்கறை செலுத்துவது அவசியமானதாகும்.

### விழிப்புணர்வும் உருவாக்கமும்

மேற்சொன்னபடி பொதுநிலையினர் திருச்சபையின் வாழ்விலும், பணியிலும் பங்கேற்று இறையாட்சிப் பணியில் கூட்டுப் பொறுப்பேற்க வேண்டும் என்றால் அதற்குரிய விழிப்புணர்வு அவர்கள் மத்தியில் ஏற்படுத்தப்படுவதும் இறையியல் வேதாகம தலைமைத்துவ பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்படுவதும் அவசியமாகும். இத்தகைய தொடர் பயிற்சிகளே நல்ல பொதுநிலை ஆளுமைகளை உருவாக்க வல்லன. இன்று அரசியல், சமூக துறைகளில் ஏற்பட்டுள்ள வெற்றிடம் நல்ல கிறிஸ்தவ கண்ணோட்டமுள்ள பொது நிலைத் தலைவர்களால் நிவர்த்தி செயயப்படவேண்டுமாயின் அவர்கள் தகுந்த முறையில் கிறிஸ்தவ மனச்சாட்சியுடனும், இலட்சியங்களுடனும் உருவாக்கப்படுவது அவசியமாகும். ஆகவே எதிர்வரும் காலங்களில் தலத்திருச்சபை தனது ஆற்றலில் கணிசமான பங்கை பொது நிலையினர் உருவாக்கத்தில் செலவிடுவது அவசியமாகும்.

### உலகின் ஒளியாக!

உலகிற்கு ஒளியாகவும், உப்பாகவும் திருச்சபை துலங்கவேண்டுமானால் அது பெருமளவிற்கு பொது நிலையினரின் கையில்தான் தங்கியுள்ளது என்பதை உணர்ந்து செயற்படுவது இன்று காலத்தின் தேவையாகும்.

இதனை உணர்ந்து விழிப்போடு செயற்பட இப் பொது நிலையினரின் தினத்திலே அனைவரும் உறுதி எடுத்துக் கொள்வோம்

**அருட்பணி ம.வி.இ. இரவிச்சந்திரன்**
**இணைப்பாளர்**
**பொதுநிலையினர் இளையோர்**
**அன்பிய பணி**

## இன்றைய சூழமைவில் பொதுநிலையினரின் பணி

### முன்னுரை

கத்தோலிக்க திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டின் இறுதி ஞாயிறு தினம் கிறிஸ்து அரசர் பெருவிழாவாக கொண்டாடப்படுவதோடு மறைமாவட்ட பொதுநிலையினர் தினமாகவும் அனுசரிக்கப்படுகிறது. திருச்சபையில் 99% அங்கம் வகிக்கும் பொதுநிலையினர் உலகிற்கு ஒளியாகவும் சாரமுள்ள உப்பாகவும் திருமறையை வளர்ப்பதில் புளிக்காரமாகவும் இருக்க வேண்டும் என்பதை உணரமறுக்கின்றனர்.

### 2ம் வத்திக்கான் சங்கம்

திருச்சபையின் வரலாற்றில் வத்திக்கான் நகரில் 1962ம் ஆண்டு தொடங்கி 1965ம் ஆண்டு நிறைவுற்ற 2ம் வத்திக்கான் சங்கம் ''வேகமாக மாறி வரும் இந்த உலகில் அத்தகைய மாற்றங்களுக்கும் புதுமைகளுக்கும் ஏற்ற வகையில் திருச்சபையும் தன் பணிகளைப் புதுப்பித்து மாற்றி அமைக்க வேண்டும் என்பது பற்றி சிந்தித்து முடிவுகளை எடுத்து செயல்படுத்த வேண்டும் என்ற நோக்கில் கூட்டப்பட்டது.

மேலும் இவர்கள் திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவோடு ஒருடலாக்கப்பட்டு இறைமக்களாக உருப்பெறுகின்றனர். தங்களுக்கே உரித்தான ஆசிரியர், குரு, ஆயன் என்ற முப்பணிகளில் குருத்துவ, இறைவாக்குரைக்கின்ற அரச அலுவல்களில் பங்கெடுக்கின்ற கூட்டமாகக் கருதப்படுகின்றனர்.

### இறையாட்சிப்பணி

திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் பெற்ற அனைத்து இறைமக்களும் திருச்சபையின் இறையாட்சிப் பணியில் பங்கெடுக்க அழைப்புப் பெறுகின்றனர். இவ்இறையாட்சிப் பணி உலகைச் சார்ந்ததாகவும் இருக்கின்றது. மனித முன்னேற்றத்திற்கான பணியாகவும் சமூகப், பொருளாதார, அரசியல், பண்பாட்டுத் தளங்களை உள்ளடக்கியதாக இருப்பதோடு இப் பணியை தாம் வாழும் சூழமைவிற்கேற்பவும் செய்ய வேண்டும்.

''நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்கு கேடு'' (1கொரி 9:17) என்ற இறைவார்த்தை நற்செய்தி அறிவிப்பதில் எமக்குள்ள கட்டாயத்தை எடுத்துக் கூறுகின்றது. இதனூடாக ஒவ்வொருவரையும் கிறிஸ்துவாக வாழ அழைப்பு விடுப்பதோடு இறைவனின் அன்பை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறி மனிதத்தையும், மனித மாண்பையும் வளர்க்கும் செயலாகவும் அமைகின்றது.

### இன்றைய பணி

எமது மண்ணில் இடம்பெற்ற கொடிய போரினால் உறவுகளையும், உடமைகளையும் இழந்து, துன்புற்று, சொந்த மண்ணிலே வாழ வழி தெரியாமல் நிற்கும் எமது உடன்பிறப்புகளை அரவணைத்து புதுவாழ்வு கொடுப்பது ஒரு இறையாட்சிப் பணியாகும். குருக்கள், திருத்தொண்டர்கள் இல்லாத இடங்களில் ஆயரின் அனுமதியோடு பொதுநிலையினர் திருமுழுக்குக் கொடுக்கலாம். தேவைக்கேற்ப பொதுநிலையினரில் இருந்து சிலரைத் தெரிந்தெடுத்து ''நற்கருணைப் பணியாளர்களாக'' நியமித்து நற்கருணை வழங்கச் செய்யலாம். 2ம் வத்திக்கான சங்கத்தின் பின் வாசகர் பணி, திருப்படப்பணி, பாடகர் பணி போன்றவற்றை பொது நிலையினர் செய்வதற்கு அனுமதியளிக்கப்படுகிறது. மற்றும் அருட்சாதனம்

(8ம் பக்கம் பார்க்க...)

**இவ்வாண்டுக்கான பொதுநிலையினர் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியிலே பிரிவு ஒன்றில் முதலாம் இடத்தை பெற்ற கட்டுரை இங்கு பிரசுரமாகிறது**

## புதியதோர் உலகம் செய்வோம்!

பண்பும்பணிவும் அழிந்து, பகையும் பழியும் மலிந்தோடிக் கொண்டிருக்கும் இன்றைய யதார்த்த உலகில்; மனிதம் மறைந்து, மரண ஓலங்களிற்குள் சிக்கித் தவிக்கும் உயிர்கள் ஏராளம், ஏராளம். அன்பு என்னும் உயரிய நிலை கடந்து, ஆணவப்பேயின் வசப்பட்டு, அடுத்தவன் வாழ்வைக் கெடுத்து, குலைப்பதற்கு காரணம்; இன்று கிறிஸ்தவ வாழ்வு மங்கிவருகிறது; மறைந்து வருகிறது. அன்றாடம் கேட்கும் அழுகுரல்களும், அளவு கடந்து பாய்ந்தோடும் அவலங்களும், கல் மனதைக் கூட கலங்கவைக்கும் மரணங்களும், நாளுக்கு நாள் அதிகரிக்க; மனித வாழ்வின் அடுத்த நிமிடம் நிச்சயமற்றதாய் மாறிக்கிடக்கின்றது. இந்த சூழ்நிலையில் அன்பை அடித்தளமாக்கி, நம்பிக்கையை உயிர்மூச்சாக்கி, உடைந்து போகும் உள்ளங்களை கட்டியெழுப்ப வேண்டும் என்பதுதான் திருச்சபையின் பிரதான நோக்கமாகும்.

திருச்சபையின் அடிப்படை அலகாக விளங்குபவர்கள் பொது நிலையினர்களே. திருச்சபை என்பது பணியாளர்களின் சமூகம். ஏனெனில் எல்லோருமே இறை ஆட்சியின் பணியாளர்களாக செயல்பட; திருச்சபையைக் கட்டியெழுப்ப, இயேசுவால் அழைக்கப்பட்டவர்கள். அதாவது வாய்மொழியாலும், வாழ்க்கை சாட்சியத்தாலும் நற்செய்தி அறிவித்து குடும்பங்கள், குழுமங்கள், சமுதாயத் துறைகள் அனைத்தையும் அதன் விழுமியங்களால் நெறிப்படுத்தி அவற்றை இறைத் தந்தைக்கு ஏற்ற காணிக்கையாய் ஒப்புக்கொடுக்கும் பணி பொதுநிலையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொதுநிலையினர்கள் திருச்சபையின் மலர்ச்சிக்காகவும், வளர்ச்சிக்காகவும் பணி செய்ய வேண்டும் என்ற பொறுப்புடையவர்கள். பொதுநிலையினரின் பணி என்பது வெறும் கிறிஸ்தவ பக்தி மார்க்கம் அல்ல; மாறாக அது இவ்வுலகை அன்பு உலகாக, அருள் உலகாக, சகோதரத் துவ உறவுகளும் சமநீதியும் நில வும் இன்ப உலகாக மாற்றும் இயேசுவின் இறை ஆட்சியில் அவரைத் தொடர்ந்தும், அவருடன் இணைந்தும் ஈடுபடும் கர்மமார்க்கமே. இதனால் தான் தம்மை நம்பிய எல்லோரையுமே இயேசு தமது இறையாட்சி பணியிலும், பலியிலும் பங்கேற்க அழைத்தார். தம்மை நம்பிய அனைவருக்கும் அவர்தந்த அடிப்படையான அழைப்பு தத்தம் சமூகங்களில் அவர்கள் இறையாட்சியின் சகோதர குழுமங்களாக வாழ்ந்தும் காட்டி தம் அன்றாட உலக ஈடுபாடுகளிலும், தம் சொற்களாலும், செயல்களாலும், அன்பு உறவுகளாலும், நீதி நிலைப்பாடுகளாலும், இறை ஆட்சியின் அடையாளங்களாகவும் அதைப் பரப்பும் ஆற்றல் மிகு பணியாளர்களாகவும் செயல்படுவதே திருச்சபையில் பொதுநிலையினரின் பணியாகும்.

இதனால் தான் இயேசு தம்மைப் பின்சென்ற மக்கள் அனைவருக்குமே ''நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாக ஒளியாய் இருக்கிறீர்கள்..... உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க!'' என அறைகூவல் விடுக்கின்றார். இவ்வாறு இயேசுவை நம்புவோர் அனைவருமே இறை அழைத்தல் பெற்றவர்கள். அவருடைய பணியாளர்களாக செயல்பட தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். கிறிஸ்தவ வாழ்வின் மிக உன்னதமான அழைப்பும், மிக புனிதமான நிலையும் பொதுநிலையினர்க்கே. இக்கண்ணோக்கில் பார்க்கும் போது யேசுவின் முதல் நிலைக்குருக்களாகவும், இறைவாக்கினராகவும், தலைமை ஊழியராகவும் திருச்சபையிலும், சமூகத்திலும் செயல்பட வேண்டியவர்கள் அனைத்து பொதுநிலையினருமே அன்றி அருட்பணியாளர்கள் - ஆயர்கள் மட்டுமல்ல. இதனால் தான் தூயபேதுரு ''நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரசகுருக்களின் கூட்டத்தினர்'' (1பேது 2:9) எனவும் ''கடவுளுக்குகந்த ஆவிக்குரிய பலிகளைப் படைக்கும் தூய குருக்களின் கூட்டமாகவும் இருப்பீர்களாக' (1பேது 2:5) எனவும் அனைத்து பொது நிலையினரின் அழைப்பையும் அலுவலையும் சுட்டிக் காட்டுகின்றார்.

மேலும்,'நம் கடவுளும் தந்தையுமானவருக்கு ஊழியம் புரியும் குருக்களாக நம்மை ஏற்படுத்தினார்'' (திருவெ 1:6) என தூய யோவான் எழுதுவது அருட்பணியாளர்களிற்கு மட்டுமல்ல; அனைத்து பொதுநிலையினருக்குமே. எனவே பொதுநிலையினர்கள் தம் ஊர்களில், நகரங்களில் சகோதரத்துவ குழுமங்களாக யேசுவின் இறையாட்சி விழுமியங்களிற்குஏற்ப வாழ்ந்து, தங்கள் சமூகங்களில் அரசியல், பொருளாதார, பண்பாட்டு துறைகளில் ஈடுபட்டு அவற்றை இறை ஆட்சிக்கு ஏற்றதாக உருமாற்றி திருச்சபையை வளர்க்கவேண்டியதே பொது நிலையினருக்கு யேசு தந்த தனி அழைப்பாகும். இவர்கள் பொதுவாக இல்லறத்தில் ஈடுபட்டு குடும்ப வாழ்க்கை நடாத்தி சமூக வாழ்வில் முழுமையாக ஈடுபடுகிறவர்கள். பொதுநிலையினர் தத்தம் சமூகங்களில் இறையாட்சியின் சாட்சியாகவும், உலகை இறையாட்சியாக உருமாற்றும் பணியாளர்களாகவும், செயற்படவும்,

(8ம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைப்படத் திறனாய்வு

## "நாடோடிகள்"

இவ்வருடத்தின் நடுப் பகுதியிலே வெளியிடப்பட்டாலும், இன்று தமிழ் நாட்டிலும், இலங் கையிலும், வானொலிகளிலும், தொலைக் காட்சிகளிலும் திரைப்பட தரவரிசையில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய இடத்தில் இருக்கும் படம் "நாடோடிகள்" ஆகும். கடந்த வருடத்தில் வெளிவந்த தமிழ் சினிமாக்களில் ஓரளவு சிலாகித்துப் பேசப்பட்ட படம் "சுப்பிரமணியபுரம்" அதனை தயாரித்து, இயக்கி, நடித்த சசிகுமார் "நாடோடிகள்" படத்தில் நாயகனாக நடிக்க, சுப்பிரமணிய புரத்தில் அவரோடு நடித்த சமுத்திரக்கனி நாடோடிகளை இயக்கியிருக்கிறார். "சுப்பிரமணியபுரம்" "பசங்க" பட வரிசையில் நட்பு என்ற மையக் கருத்தில் நாடோடிகளும் இணைகின்றது. நட்புக்குரிய வரைவிலக்கணத்தை வேறொரு கோணத்தில் கொடுக்க முனைகிறது.

நட்பு என்றால் என்ன? நண்பர்கள் எனப்படுவர்கள் யார்? போருக்குப் பின்னரான யாழ்ப்பாணச் சூழமைவில், ஒவ்வொரு சந்தியிலும், ஒவ்வொரு மதவிலும் அல்லது எந்த வீதியில் உட்கார இடம் கிடைக்கிறதோ அங்கெல்லாம் நண்பர்கள் என்ற பெயரில் இளைஞர்கள் கூட்டங்களை குறிப்பாக மாலை வேளைகளில் காணலாம். இவர்களது நட்புச் செயற்பாடுகள் என்ன தெரியுமா? வீதியால் செல்கின்ற இளம் பெண்களைக் கிண்டல் செய்வது; போக்குவரத்தை குறுக்கீடு செய்வது; மறைவாகவும், சில வேளைகளில் வெளிப்படையாகவும் 'தண்ணி' அடிப்பதும் ஆகும். ஆனால் நட்பு என்பதனை உயர்ந்த இலட்சியத்தை அடைய ஒன்றிணைந்து செயற்படுவதாகவும், மாபெரும் தியாகங்களை புரியவும் தயாராக இருப்பதாகவும் நாடோடிகள் மூலம் உணர்த்தியிருக்கிறார்கள்.

தான் காதலிக்கும் மாமாவின் மகளைத் திருமணம் செய்ய அரச உத்தியோகம் கிடைக்க வேண்டும் என்ற நிபந்தனையால், அரச உத்தியோகக் கனவில் காத்திருக்கும் கர்ணா (சசிகுமார்) வங்கியில் கடன் எடுத்து கணனி நிலையம் நடத்த துடிக்கும் சந்திரன், வெளிநாடு சென்று சம்பாதிக்கும் கனவில் மூழ்கியிருக்கும் பாண்டி ஆகிய மூவரும் நண்பர்கள். இவர்களது பழைய நண்பன் சரவணன். சரவணனின் காதல் அநியாயமாகப் பிரிக்கப்படுகிறது. தற்கொலை செய்யுமளவிற்குப் பாதிக்கப்படுகிறான் சரவணன். இந்நிலையில் மற்ற மூன்று நண்பர்களும் இணைந்து தமது அரச உத்தியோகம், கணனி நிலையம், வெளிநாடு போதல் ஆகிய கனவுகளை ஒருபுறம் வைத்து விட்டு தமது நண்பனான சரவணனுக்கு உதவ முன்வருகின்றார்கள். சரவணனின் காதலியை தமது உயிரையே பணயம் வைத்து அழைத்து வந்து திருமணம் செய்து வைக்கிறார்கள். இந்த முயற்சியில், கர்ணாவின் கண் பாதிக்கப்படுகிறது. பாண்டியின் இருகாதுகளும் செவிடாகின்றன. அதுமட்டுமல்ல. மூவரும் கைது செய்யப்பட்டு காவல் நிலையத்தில் அடைக்கப்படுகிறார்கள்.

இதனால் அம்மூவரதும் கனவுகளும் கலைந்து போகின்றன. அரச உத்தியோகம், வங்கிக்கடன், வெளிநாட்டுப் பயணம் எல்லாமே தடைப்படுகின்றன. நட்புக்காக இவ்வளவு இழப்புக்களையும் சகித்துக் கொள்கிறார்கள். ஆனால் இவ்வளவு இழப்புக்களை விலையாகக் கொடுத்து அவர்கள் இணைத்து வைத்த காதலர்கள், திருமணம் கொடுத்த சிலநாள் இன்பங்களின் பின்பு சண்டையிட்டு பிரிந்து கொள்கின்றார்கள். கொதிப்பேறிய நண்பர்கள், தமது தியாகங்களைக் கொச்சைப்படுத்தியவர்களைப் பழிவாங்கப் புறப்பட்டு, அவர்களுக்கு நட்பு என்ற உண்மையான பாடத்தை புகட்டுவதை உச்சக் கட்டத்தில் காட்டி அமைகிறது. "நாடோடிகள்" படம்.

படத்தின் முதற்பகுதி நண்பர்களின் அரட்டையிலும், எதிர்பார்ப்பு வாழ்க்கையின் உல்லாசத்திலும் விறுவிறுப்பாகச் செல்கிறது. சரவணனின் வரவிற்குப் பிறகு படம் பலாக்காய் பாலாக இழுபடத் தொடங்குகிறது. இரண்டு மணித்தியாலங்களும் 45 நிமிடங்களும் ஓடும் இத்திரைப்படத்தை தொகுப்பாளர் இன்னும் சுருக்கியிருக்கலாம். படத்தின் பிற்பகுதியில் சின்னத் திரைகளில் வரும் இழுபடும் தன்மை அதிகமுண்டு. இயக்குனர் சமுத்திரக்கனி பல சின்னத்திரைகளை இயக்கியது இதற்குக் காரணமாக இருக்குமோ?

என்னதான் வித்தியாசமாக படம் எடுக்க முனைந்தாலும், சாதாரண சனக் கூட்டத்தின் உணர்ச்சிகளுக்கு தீனி போட்டு அவர்களையும் அரங்குக்கு அழைப்பதற்காக சில தேவையற்ற குத்தாட்டங்கள் (யக்கா, யக்கா பாடல்) சண்டைகள் புகுத்தப்பட்டிருக்கின்றன. இது "நல்ல படமெடுத்து நட்டப்பட விரும்பாத" இயக்குனரதும் தயாரிப்பாளரதும் வியாபார மன நிலையைக் காட்டுகிறது. சுப்பிரமணிய புரம், பசங்க போன்ற படங்கள் "நல்ல படம்" என்ற பெயருடன் வியாபார ரீதியிலும் வசூல் செய்தது போல, நாடோடிகளையும் அதே பாணியில் அமைத்திருக்கிறார்கள். ஆனாலும் நல்ல படங்கள் உருவாக்க, தமிழ் சினிமா நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய தேவையை நாடோடிகள் உணர்த்தாமலில்லை.

## விவிலிய முழுமையாக 451 மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது

விவிலியம் இதுவரை உலகெங்கும் முழுமையாக 451 மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ள அதே வேளை திருவிவிலியத்தின் ஒருசில பகுதிகள் மட்டும் 2479 மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக உலக விவிலிய வெளியீட்டுப்பிரிவு அறிவித்துள்ளது. இதன்படி உலகளாவிய ரீதியில் திருவிவிலியமே மிக அதிகளவில் மொழிமாற்றம் செய்யப்பட்டதும் அதிக பிரதிகள் வெளியிடப்பட்ட புத்தகமாகவும் உள்ளது. உலக விவிலிய வெளியீட்டுப் பிரிவின் அறிக்கையின்படி உலகில் வாழும் அனைத்து மனிதர்களுடனும் ஒப்பிடுகையில் 95 விழுக்காடான மக்களுக்கு தம்மால் விளங்கிக் கொள்ளக் கூடிய ஒரு மொழியில் விவிலியத்தை வாசிப்பதற்கு சந்தர்ப்பம் உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

## கடவுளை கைத்தொலைபேசியில் அழைக்கலாம்

நெதர்லாந்தில் கடவுளை கைத் தொலைபேசியில் அழைப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. குறோனிங்கன் நகர கலைஞரான யொகான் வன் டெ டொங் அவர்கள் கூறுகையில் முதன் முதலாக கடவுளின் பெயருக்கு ஒரு கைத்தொலைபேசி இலக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். யாராவது இந்த இலக்கத்திற்கு அழைக்கும்போது "நீங்கள் கடவுளுடன் கதைக்கின்றீர்கள். இந்த வேளையில் நான் இங்கு இல்லை. விரும்பினால் உங்கள் செய்தியை எனது தொலைபேசியில் பதிவு செய்து விடவும் அல்லது மீண்டும் ஒரு வேளையில் அழைக்கும்போது என்னுடன் கதைத்துக் கொள்ளலாம்" என மறுபக்கத்திலிருந்து தகவல் தரப்படுகின்றது. இப்பதில் மூலம் பிரச்சினையுள்ள ஒருவர் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு கடவுளிடம் தனது பிரச்சினைகளை விளக்கிக்கூற சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதுவும் ஒரு விதத்தில் ஒரு செபமாகின்றது எனவும் இத்திட்டத்திற்கு உதவியளிக்கும் நெதர்லாந்து வானொலி குறிப்பிட்டுள்ளது.

# பணமா? உறவா?

இன்று உலகமே பணத்திற்குப் பின்னால் தான் ஓடிக்கொண்டிருக்கின்றது. "பணம் என்றால் பிணம் கூட வாயைத் திறக்கும்" என்ற அளவுக்குப் பணப்பித்துப் பிடித்து உலகில் மனிதர்கள் இருக்கிறார்கள் மனிதர்கள் பணம் சம்பாதிக்க செலவு செய்யும் நேரத்தை விட உறவுகளைக் கட்டியெழுப்ப செலவு செய்யும் நேரம் மிகக் குறைவு பணமா? உறவா? என்பதே நமக்கு முன்வைக்கப்படும் சவால் தமிழ் பாடல் ஒன்று சொல்கிறது. "செல்வம் நமக்கிருந்தும் பிறர்க்கு ஈயாதவர் இருந்தென்ன போயென்ன"? சக்கேயு செல்வத்தை சேர்த்து வைத்திருந்த போது இல்லாத மகிழ்ச்சியும் சமாதானமும் பிறரோடு பகிர்ந்து கொள்ள முன்வரும் போது அவனது வீட்டிற்கு மீட்பு கிடைத்தது. நீ.மொ. 2:28 கூறுகின்றது "தம் செல்வத்தை நம்பி வாழ்வோர் சருகென உதிர்வர் கடவுளை நம்பி வாழ்வோரே தளிரெனத் தழைப்பர்" ஒரு கிறிஸ்தவப் பாடல் வரிகளில் இப்படி குறிப்பிடப்படுகின்றது. பணத்துக்காக ஓடி நீ அலைந்தாய் மரணம் வந்தால் பணம் எல்லாம் தூசி யேசுவுக்குப் பின்னால் இன்று ஓடு முடிவில்லா வாழ்வு தருவார்.

நீ.மொ. 19:4ல் பணத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. பணக்காரன் விண்ணரசில் நுழைவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது" லூக் 16:19 செல்வரும் இலாசரும் எவ்வளவு செல்வராக இருந்தும் இறையரசில் நுழைய அவனுக்கு இடம் கிடைக்கவில்லை. ஏழை இலாசருக்கோ விண்ணக வீட்டில் ஆபிரகாமின் மடியில் இடம் கிடைத்தது.

நீ.மொ. 23:4 கூறுகின்றது செல்வராக வேண்டுமென்று பாடுபட்டு உருக்குலைந்து போகாதே அதனால் உனது அறிவை இழந்து விடாதே இல்லாமற் போகும் பொருள் மேல் நீ கண்ணும் கருத்துமாய் இருப்பானேன் கழுகு போல் அது தனக்குச் சிறகுகளை வளர்த்துக் கொண்டு வானத்தில் பறந்து போகுமன்றோ? சபை உரையாளர் 5:10:13ல் பணத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். நல்ல சமாரியன் என்பவன் அடிபட்டுக்கிடந்த மனிதருக்காக தனது உடல் உழைப்பையும் பணத்தையும் பகிர்ந்து தர முன் வந்த போது நல்ல சமாரியராக உயர்த்தப் பெற்றார். "அருள் இல்லாருக்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை" எனவே பணம் சேர்ப்பது தவறல்ல பணத்தை யாருக்காக எதற்காக சேர்க்க விரும்புகின்றோம் பணமா? உறவா? செல்வமா? கடவுளா? சிந்திப்போம்.

அ.மேரி அன்ரனியா
நாவாந்துறை வடக்கு
யாழ்ப்பாணம்.


## நீங்காத நினைவுகளின் 21ம் ஆண்டு



அமரர்
ஜெ.ம.யூட் சக்கறி சந்திரகுமார்

படைப்பு 28.12.1970 பறிப்பு 26.11.1988

பாசத்தின் திருமகனே
பண்புடனும் மகிழ்வுடனும்
பாரினில் வாழ்ந்த உன்னை
பாசமுடன் நினைக்கின்றோம்.

உன் நினைவுடன் வாழும்
அப்பா, அம்மா, தம்பிமார்
பெரியம்மா, மாமா, அண்ணாமார்
அக்காமார், மற்றும்
பாசமுள்ள உறவுகள்.

19/2 பீச்லேன்,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

Advt-81/09

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
செ.பேணாட்
இராஜேந்திரம்

அன்னை மடியில் 08.06.1937 ஆண்டவனடியில் 23.11.2002

உண்மையாகவே, எந்நாளும்
நிலைத்திருக்கும் ஆசியை அவர் பெற்றுள்ளார்;
உமது முகத்தை அவர் மகிழ்ச்சியுடன் கண்டு
களிக்கச் செய்தீர். திபா. 21:6

முப்பது ஆண்டுகள் எம்மோடு வாழ்ந்து
உமது அன்பாலும் அரவணைப்பாலும்
பாசத்துடன் எம்மை வழிநடத்தினீர்
உமது ஆன்மா இறைவனில் இளைப்பாறிட
தினம் வேண்டுகின்றோம்.

என்றும் உம் நினைவுடன்
மனைவி - இ.பேணடேற்
மகன் - ஜோய் திலீப்குமார்

2ம் கட்டை இராசவீதி,
கோப்பாய் மத்தி.

Advt-66/09

## இதய அஞ்சலி



எமது கலை இலக்கிய எழுத்தாளர்
நண்பர் செ. யோசப் பாலா அவர்களின்
தாயார் 09.11.09ல் மரணம் எய்திய
செய்தி கேட்டு ஆறாத்துயரில் மூழ்கி
உள்ள அவரது குடும்பத்தினருக்கு
எமது அனுதாபத்தையும் தாயாரின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து
எமது அஞ்சலியையும்
தெரிவிக்கின்றோம்.

– கலை இலக்கிய நண்பர்கள்

Advt-84/09

## இதய அஞ்சலி

பிரான்சிஸ்கன் மறைபரப்பு சகோதர
சபையின் அருட்சகோதரர்
செ. தொபியாஸ் C.M.S.F அவர்களின்
தாயார் செபஸ்தியாம்பிள்ளை றோசலீன்
அவர்களின் பிரிவு துயர செய்தி கேட்டு
நாமும் குடும்பத்தாரின் துயரில்
இணைந்து எமது சபையினரின்
அஞ்சலியை செலுத்துவதுடன்
அன்னையின் ஆன்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.



மாகாணத்தலைவர், அருட்சகோதரர்கள்
பிரான்சிஸ்கன் மறையுரப்பு
சகோதர சபை.

116, விகாரை வீதி,
மாத்தளை.

Advt-82/09

## நன்றிகள்



எமது தாயார் செபஸ்தியாம்பிள்ளை றோசலீன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு 09.11.2009 முதல் எமது துயரில் ஆறுதல் கூறிய வெளிநாட்டு, உள்நாட்டு உறவுகள் நண்பர்களுடன், இல்லம் வந்து ஆறுதல் கூறி செபித்த அருட்தந்தையர், பங்குத்தந்தையர் அருட்சகோதரி கள், அருட்சகோதரர்கள், பக்தி சபையி னர், அயலவர், உற்றார் உறவினர், நண்பர் கள் யாவர்க்கும் எமது இதய நன்றிகள்.

செபஸ்தியாம்பிள்ளை குடும்பத்தினர்.
அருட்சகோதரர் தொபியாஸ்.

12, மணிஓசை,
சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

Advt-83/09


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதியதோர் உலகம்... (6ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுற்கு உதவவும், அத்தகைய இறையாட்சி சமூகங்கள் தொடங்கப்படாத இடங்களிற்கு சென்று அங்கு நற்செய்தியை அறிவித்து அத்தகைய சமூகங்களை தொடங்கி வைக்கும் ஊழியத்தை செய்வதன் மூலம் திருச்சபையை கட்டியெழுப்ப பொது நிலையினர் அழைக்கப்பட்டுள்ளனர். இதனை தூயபவுல் மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றார். ''திருத்தொண்டாற்ற இறைமக்களை ஆயத்தப்படுத்தவும், கிறிஸ்துவின் உடலை கட்டி எழுப்பவும் இவர்களை அவர் (இயேசு) ஏற்படுத்தினார்.'' (எபே.04.12) எனவே பொதுநிலையினர் அனைவரும் திருத் தொண்டாற்ற வேண்டியவர்கள்.

தேவ அழைத்தல் என்பது அருட்பணியாளர்கட்கும் துறவிகளுக்கும் மட்டுமல்ல பொது நிலையினருக்குமுரியதே. பொதுநிலையினரை விட அருட்பணியாளர்கள் துறவிகளின் அழைத்தல் தனிச் சிறப்பு வாய்ந்ததல்ல. கிறிஸ்துயேசுவில் திருமுழுக்குப் பெற்ற அனைவரும் மாண்பிலும் செயற்பாட்டிலும் சமமானவர்களே. (எண்208) அதாவது பொது நிலையினர், அருட்பணியாளர்கள் என்ற அழைத்தல்கள் பலவிதமாயிருப்பினும் அனைவரினதும் பணி ஒன்றே. பொதுநிலையினர்க்கும் இயேசுவின் இறைவாக்கு, தலைமை, குருத்துவ பணியாளர்களே என்பது தெளிவு. இது 2ம் வத்திக்கான் சங்கமும், திருச்சபையின் அண்மைக் கால ஆசிரிய ஏடுகளும் அழுத்திக் கூறுகின்றன. (காண் 2 ஆம் வத்திக்கான், திருச்சபை 34-36) இவ்வாறு இறை ஆட்சிப்பணியின் முப்பெரும் அலுவல்களான போதித்தல், வழி நடத்துதல், வழிபாடுசெய்தல் என்பன பொதுநிலையினருக்கும் உரிய பணிகளே என்பதை உணர்ந்து பணி செய்யவேண்டும்.

பொது நிலையினர் இறை ஆட்சிப்பணிக்குரிய முப்பெரும் அலுவல்களை ஆற்றும் முக்கியத் தளம் உலகியல் சமுதாயமாகும். இறையாட்சி குடும்பங்களாகவும், குழுமங்களாகவும் வாழ்ந்து பல் வேறு சமுதாய துறைகளில் ஈடுபட்டு அவற்றை நற்செய்தி விழுமியங்களால் ஊடுருவி இறை ஆட்சிக்கேற்ப அவற்றை உருமாற்றுவதே திருச்சபை மட்டில் பொது நிலையினரின் பங்காகும். எனவே ''மக்கள் பணியை மகிழ்வோடு ஏற்று....'' (1பேது 5:2-4) பணிசெய்ய பொது நிலையினர் அழைக்கப்பட்டுள்ளனர். எனவே வெளிவேடமான வாழ்வை களையவேண்டும் அதனையே பரிசுத்த வேதாகமமும் கூறுகிறது. ''உங்கள் திருவிழாக்களை நான் வெறுத்து அருவருக்கின்றேன்.; உங்கள் வழிபாட்டுக்கூட்டங்களில் எனக்கு விருப்பமே இல்லை (ஆமோ 5:21-24) எனவே ''.... நன்மை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்; நீதியை நாடித் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள்; திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள்'' (ஏசா 1:10-17) என்ற வார்த்தைக்கேற்ப பொது நிலையினர் ஒவ்வொருவரும் திருச்சபையில் பணியாற்ற வேண்டும். பொதுநிலையினர் நாம் ஒவ்வொருவருமே சிந்திக்க வேண்டும்.

இராணுவத்தளபதி போல ''நான் சொல்கிறேன், நீ செய்'' என்று செயல்படுகிறோமா? அல்லது பர்ணபாவைபோல உறவுகளை வளர்க்கும் தோழமையுடன் செயல்படுகிறோமா? சிந்திப்போம்...... 'புதியதோர் உலகம் செய்வோம். கெட்ட போரிடும் உலகை வேரோடு சாய்ப்போம். புதிய விண்ணகத்தை மண்ணகத்தில் படைப்போம். ''இதோ நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்''. (திருவெளி. 21:5) எனவே பொதுநிலையினர் நாம் ஒவ்வொருவரும் அவரோடு இணைந்து ''புதிய சமுதாயம் படைப்போம். திருச்சபையின் வளர்ச்சிக்கு பணி செய்வோம்'' இதையே நமது மறைமாவட்டத்தின விருது வாக்காகக் கொள்வோம்.

## இன்றைய சூழமைவில் (6ம் பக்கத் தொடர்ச்சி)

பெற இருக்கும் மக்களை தயார் படுத்த பொதுநிலையினருக்கு கடமையுண்டு.

### அழைத்தலை புறந்தள்ளாமல் ஏற்றுக் கொள்வோம்

பல்வேறுவிதமான அழைத்தல்களை திருச்சபை எமக்குத் தந்த போதிலும் பொதுநிலையினரின் பங்களிப்பு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. எமது யாழ்த் திருச்சபையைப் பொறுத்தமட்டில் ஒரு குறிக்கப்பட்ட சிலரே எல்லா செயற்பாடுகளிலும் ஈடுபடுவதை காணக்கூடியதாக இருக்கின்றது. பழைமைவாதிகள் அதிகமாகக் காணப்படுவதும், தேவையற்ற பாரம்பரியங்களை விடாமல் பற்றிக் கொண்டிருப்பதும் அதற்குக் காரணமாகும். புதியவற்றை நாம் உள்வாங்குவதோடு இன்றைய உலகின் வேகத்திற்கும் மாற்றத்திற்கும் எம்மை அனுமதித்துக் கொள்வது முக்கியமானதாகும். பொதுநிலையினருக்குரிய ஒரு உன்னதமான அழைத்தலாக ''நற்கருணைப் பணியாளர்'' நிலை வழங்கப்பட்டுள்ளது. நற்கருணைப் பணியாளர்களாக பணியாற்ற பலர் முன்வந்தாலும் திருநிலையினரும் பொது நிலையினரும் ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றனர். இப்பணி திருச்சபையில் இரு பகுதியினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டால் இவர்களைப் பயன்படுத்தி நோயாளர்கள், முதியோருக்கு அடிக்கடி நற்கருணை வழங்கலாம். குருக்கள் பற்றாக்குறை இருக்கும் பங்குகளில் இவர்களின் பணியினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### முடிவாக

திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் இறையாட்சியை மண்ணில் மலரச்செய்ய பொறுப்போடு உழைக்க வேண்டியவர்கள் என்பதை உணர்ந்து பிரமாணிக்கமாகப் பணி செய்ய முன்வருவோம். பக்திச்சபைகள், பணிக்குழுக்களில் எம்மை இணைத்துக் கொள்வதோடு பொறுப்புகளை ஏற்க அழைப்புகள் கிடைக்கும்போது அவற்றை புறந்தள்ளாமல் ஏற்றுக் கொள்வோம். முதிர்ச்சி அடைந்த பொதுநிலையினர் உள்ள இடத்தில் தான் திருச்சபை வளர்ச்சியடையும் என்பதை உணர்ந்து அனுபவமுள்ளவர்கள் பின்புலமாக நின்று புதியவர்களை உருவாக்குவதன் மூலம் பொது நிலையினருக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தைக் கொடுப்போம்.

(இ.அ. அலெக்ஸ்)
தலைவர்
யாழ் மறைமாவட்ட
பொதுநிலையினர் கழகம்.

## பொதுநிலையினரின் மேய்ப்புப் பணி... (1ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையாகவே திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் கூட்டுப் பொறுப்பாளர் என்பதை அங்கீகரிக்க வேண்டும.

தற்பொழுது பொதுவான பொறுப்பு, பொதுவான பணி என்பதை மறந்து விட்டு திரு ஆட்சி, சார்புத்தன்மை திருச்சபையில் அடையாளம் காணப்படுகின்றது. மேலும் திருத் தந்தையவர்கள் கூறுகையில் எந்த அளவுக்கு ஒருவருடைய மேய்ப்புப் பணிப் பொறுப்பும் குறிப்பாக பொதுநிலையினருடையவை அங்கீகரிக்கப்பட்டு ஊக்கு விக்கப்படுகின்றன என்று வினா எழுப்பியுள்ளார்.

## திருச்சபையின் மையமாகும் பொதுநிலையினர்

பல நூற்றாண்டுகளாக திருச்சபையின் வாழ்விலும், பணியிலும் ஓரங்கட்டப்பட்டு இரண்டாந்தரக் குடிகளாகக் கருதப்பட்ட பொதுநிலையினரைத் திருச்சபையின் மைய நிலைக்கு அழைத்து வர அடித்தளமிட்டது 2ம் வத்திக்கான் சங்கம். பல்வேறு விவாதங்கள், ஆய்வுகள் பாப்பரசர்களின் சுற்றுமடல்கள் உதாரணமாக "கிறிஸ்துவின் நம்பிக்கையாளரான பொது நிலையினர்" (1988ல் 2ம் அருளப்பர் சின்னப்பரின் சுற்றுமடல்) இடம் பெற்ற போதிலும் இன்று கூடத் திருச்சபை பல்வேறு அமைப்புக்களின் பார்வையாளராகவே இருக்கின்றோமே அன்றி பங்கேற்பவர்களாக மாறவில்லை. இதற்குத் திருநிலையினர் எம்மீது நம்பிக்கை கொள்வதில்லை, எமக்குரிய பொறுப்புக்களை வழங்குவதில் தயக்கமும், தடுமாற்றமும் கொண்டுள்ளார்கள் என்று அவர்கள் மீது பழியைப் போட்டு நாம் தப்பித்துக் கொள்கின்ற மனப்பான்மையுடன் வாழ்ந்து கொண்டிருப்பது ஒரு முக்கிய காரணமாகின்றது. எனவே இந்த நிலை மாற வேண்டும். ஒருவர் தனது சுட்டுவிரலைக்காட்டி, மற்றவர் மீது குற்றம் சுமத்துகின்ற போதுஏனைய மூன்று விரல்களும் அவரைச் சுட்டிக்காட்டுகின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்தப் பின்னணியில் பொதுநிலையினராகிய நாம் திருநிலையினர் மீது குற்றம் சுமத்திக் கொண்டு, தப்பிக் கொள்கின்ற பாரம்பரியத்தை "குருக்கள் ஆண்டாக"ப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இந்த ஆண்டிலாவது தவிர்த்து விட்டு எம்மாலான பங்களிப்பை திருச்சபையின் வாழ்விற்கும், பணிக்கும் வழங்க முன்வர வேண்டும் என்று உங்களை அழைக்கின்றேன்.

"அன்பர்களே நீங்கள் உரிமை வாழ்விற்கு அழைக்கப்படுகின்றீர்கள்" (கலா. 5:13).

## சேமக்காலை ஒரு... (3ம் பக்கத் தொடர்ச்சி)

விசுவாசிகள் பங்கு கொண்ட இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்ட மேதகு ஆயர் தோமஸ் ஆண்டகை அவர்கள் கல்லறையை ஆசீர்வதித்தார். தொடர்ந்து குருக்கள் கல்லறைகள் மந்திரித்தார்கள். ஒவ்வொரு கல்லறையின் முன்னாலும் ஏற்றப்பட்ட ஒளி ஒரு ஆன்மீக உணர்வை ஏற்படுத்தியது.

### வேதனை தரும் விடயம்

வழிபாடுகள் எல்லாம் நிறைவு பெற்ற பின் அன்றைய நாளின் புனிதத் தன்மையையும் தாம் நிற்கும் இடத்தின் தூய்மையையும் மறந்து இளைஞர்கள் சிலர் இளம் பெண்கள் மீது அங்க சேஷ்டை புரிந்ததையும், அதை தடுக்க முற்பட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியதையும் காணக்கூடியதாக இருந்தது. குருக்கள், கன்னியர்கள், பெண்கள் நிற்கின்றார்கள் என்பதையும் மறந்து, தூஷண வார்த்தைகள் பேசியது வேதனைக்குரிய விடயமாகும்.

### முடிவுரை

தூய மரியன்னை சேமக்காலை பெரும் பாலும் யாழ்மறைக்கோட்டத்தை உள்ளடக்கிய யாழ் நகரப் பங்குகளுக்கே உரித்தானதாக இருக்கின்றது. இப்பங்குகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை என்றாலும் சேமக் காலையை துப்பரவு செய்வதற்குஒரு திட்டத்தை வகித்து செயற்படுவது சிறப்பாக இருக்கும். அதே நேரம் கல்லறைகளுக்கு சொந்தமானவர்களும் தங்களுடைய கல்லறைகளை சுத்தம் செய்து துப்பரவாகவைத்திருப்பது அவர்களின் கடமையாகும் மேலும் சேமக்காலையின் நுழைவாயிலில் இருந்து சிற்றாலயம் வரையான பாதையின் இருமருங்கிலும் மற்றும் எல்லை யோரங்கிலும் மின் விளக்குகள் பொருத்த நடவடிக்கைகள் எடுப்பதும் முக்கியமானதாகும். நாம் எல்லோரும் இறந்த பின் இயேசுவைப் போல அவர் சாயலாக உத்தானமாகும் வரை அமைதியாக உறங்கும் இடம் என்பதையும் இது இறைவனின் சாயலாக படைக்கப்பட்டோரின் உடல்கள் அங்கே வைக்கப்பட்டுள்ளது என்பதையும் உணர்ந்து சேமக்காலையின் புனிதத் தன்மையை பேணுவோம

இ.அ. அமலரட்ணம்
பேராலயம்.

## பொதுநிலையினர் தினம் 2009 போட்டி முடிவுகள்

### மாகாணமட்ட முடிவுகள்

சுவரொட்டி தயாரித்தல்

பிரிவு 1
1ம் இடம் : அ. சிறானி - அஞ்சனந்தாழ்வு பங்கு.
2ம் இடம் : அன்ரன் கத்தரீன் - O.L.R பங்கு.
3ம் இடம் : த. ஜீன் - திருநெல்வேலி பங்கு.

பிரிவு 2
1ம் இடம் : ப. ஜோர்ஜ் - சக்கோட்டை பங்கு.
2ம் இடம் : றொய்சி லூகினி பேணாட் லூசியன் - நாவாந்துறை
3ம் இடம் : செறின் லேகினியா செபமாலை - O.L.R பங்கு.

கட்டுரைப் போட்டி

பிரிவு 1
1ம் இடம் : யேசுதாசன் ஜெனிங்ஸ் சறோன் - நவாலி.
2ம் இடம் : தோமஸ் நிதர்சனா - நாவாந்துறை பங்கு.
3ம் இடம் : மேரி டியூலா நாவாந்துறை பங்கு.

பிரிவு 2
1ம் இடம் : ஆன் மரீனா தியடோர் - நவாலிப் பங்கு.
2ம் இடம் : செறின் டெலினா மகாலிங்கம் - உரும்பிராய் பங்கு
3ம் இடம் : ஐறின் திறோசா - சுண்டுக்குளி பங்கு.

### மறைக்கோட்ட மட்ட முடிவுகள் :

பருத்தித்துறை மறைக்கோட்டம் (கட்டுரைப் போட்டி)

பிரிவு 1 - 1ம் இடம் : வி. ஷெலிமஸ் ராஜ் - சக்கோட்டை பங்கு
2ம் இடம் : உ. சோபனா - சக்கோட்டை பங்கு.
3ம் இடம் : றோ. அமலநிலா - சக்கோட்டை பங்கு.

பிரிவு 2
1ம் இடம் : து. ஜெகன் - சக்கோட்டை பங்கு.
2ம் இடம் : D. கார்திகா - சக்கோட்டை பங்கு.
3ம் இடம் : வின்சன் இராசகுமார் நிறோஜினி - சக்கோட்டை

### இளவாலை மறைக்கோட்டம்

பிரிவு 1
1ம் இடம் : இயேசுதாசன் ஜெனிங்ஸ் சறோன் - நவாலி
2 இடம் : கி. மேரி யூடிற்றா - ஆனைக்கோட்டை.
3ம் இடம் : ஆன் பிரவீனா தியடோர் - நவாலி.

பிரிவு 2
1ம் இடம் : ஆன் மரீனா தியடோர் - நவாலிபங்கு
2ம் இடம் : செறின் டெலினா மகாலிங்கம் - உரும்பிராய்
3ம் இடம் : விக்ரர் அன்ரனி - உயரப்புலம்.

### யாழ்ப்பாண மறைக்கோட்டம்

பிரிவு 1
1ம் இடம் : தோமஸ் நிறஞ்சனா - நாவாந்துறை.
2ம் இடம் : மேரி டியூலா - நாவாந்துறை.
3ம் இடம் : நீ. யோசவாஸ் - O.L.R.

பிரிவு 2
1ம் இடம் : ஐறின் நிறோசா - சுண்டுக்குளி.
2ம் இடம் : பமிலா அருள்நேசன் - நாரந்தனை.
3ம் இடம் : கிறிஸ்ரின் கமலினி - நாவாந்துறை.

16ம் மாத நினைவஞ்சலி

45ம் நாள் நினைவஞ்சலி





அமரர்
யோசேப்
றோச்குணநாயகம்

செல்வி
ஜெறோனா (யுபியா)
றோச்குணநாயகம்

| 1951.05.07 | தோற்றம் | 1990.10.15 |
|---|---|---|
| 2008.07.08 | மறைவு | 2009.10.23 |

அகல்விளக்காய், அணையாத அன்புச்சுடராய்,
இல்லத்தின் குலவிளக்காய் வாழ்ந்த எங்கள் அன்புத் தந்தையே,
அருமைச்சகோதரியே! அமைதியாக, அவசரமாக உங்கள் உயிர்
பிரிந்ததனால் நாம் கலங்கி நிற்கின்றோம். அமலன் பாதமே தஞ்சமென
நீர் சென்றதனால் ஆறுதல் அடைகின்றோம்.

ஆறுதலின் ஊற்றே இறைவா!
உமது இன்ப சந்நிதானத்தில் இவர்களது ஆன்மாக்கள் அமைதி அடைய அனுதினமும் வேண்டுகின்றோம்.

வேதமாதா கோவிலடி
தும்பளை, பருத்தித்துறை. Advt-85/09

என்றும் உங்கள் அன்பிற்காக ஏங்கும்
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் ... அவர்களது அச்சகத்தில் 2009 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org